உ
சிவமயம்

# 12வது ஆண்டுப் பூர்த்தி விழா



வெள்ளவத்தை அருள் மிகு நாகபூஷணி அம்மன் ஷேஸ்த்திரம்
துன்பம் தீர்க்கும் கலியுக ஞான ஈஸ்வரி

# 12வது ஆண்டுப் பூர்த்தி விழா

## வெள்ளவத்தை அருள்மிகு
## நாகபூசணி அம்மன் ஷேஸ்த்திரம்

# துன்பம் தீர்க்கும் கலியுக
# அவதார ஞான ஈஸ்வரி


**26/18A, Fernando Road, Wellawata**
**Colombo - 06**
**Tel : 4877075**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. 12வது ஆண்டுப் பூர்த்தி விழா | 1 |
| 2. பொருளடக்கம் | 2 |
| 3. ஆசியுரை | 3 |
| 4. அணிந்துரை | 10 |
| 5. பஞ்சபுராணம் | 14 |
| 6. பிள்ளையார், அம்மன் பாடல்கள் | 16 |
| 7. துன்பம் தீர்க்கும் கலியுக ஞானஈஸ்வரி | 32 |
| 8. அம்மன், முருகன், பிள்ளையார் பாடல்கள் | 34 |
| 9. அபிராமி அந்தாதி | 55 |
| 10. வரலட்சுமி விரதக்கதை | 67 |
| 11. கேதாரா கௌரி நோன்புக் கதை | 71 |
| 12. திருவெம்பாவை | 77 |
| 13. சக்திக் கவசம் | 83 |
| 14. நாகதாயே தேரில் ஏறி வா வா | 91 |



## ஸ்ரீ காயத்திரி மந்திரம்

ஓம் ! பூர்புவ: ஸ்வஹா:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோநஃ ப்ரசோதயாத்

## மூலமந்திரம் மூலமந்திரம்

ஓம் சக்தியே ! ஓம் மகா கணபதியே !
ஓம் சக்தியே ! நாக தாயே !
ஓம் சக்தியே ! பத்திரகாளித் தாயே !
ஓம் சக்தியே ! கலியுக அவதாரமே !
ஓம் சக்தியே ! ஞானகணேஸ்வரித் தாயே !

# ஆசியுரை

உ

சிவமயம்

**உலகை இயக்கும் நாகசக்தி**
**எளிமைத்தாய் ஸ்ரீமதி ஞானகணேஸ்வரிதர்மபாலன்**
**அவர்களின் அருட்பார்வையும் அற்புத உரையும்**
**வாகீச கலாநிதி அருட்கலைமாமணி**

நயினை கனகசபாபதி நாகேஸ்வரன் M.A
முதுநிலை விரிவுரையாளர்
மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிகுல்லோயா.

சக்தி என்பது ஒன்று இல்லையெனில் உலகமோ, உலகின் சுழற்சியோ, கோள்களோ, கோள்களின் இயக்கமோ, பொருள்களோ, பொருள்களின் அசைவோ, இயற்கையின் வனப்போ, இயற்கை அற்புத நிகழ்ச்சிகளோ எதுவும் இல்லையாம். உலகம் கற்கும் உலகப் பொருட்களுக்கும் மூலமாக உள்ளதும், உலகங்களாகவும், உலகப்பொருட்களாகவும் நின்று விளங்குவது சக்தியே. உலகைத் தாங்கி நிற்பதும் நாகத்தின் சக்தியே சக்தியின் வடிவமே உலகம் (உலகம் உருண்டை வடிவமானது) சக்தியின் திருவிளையாடலைப். பஞ்ச பூதங்களிலும், அணுமுதல் அண்டப கிரண்டம் வரை எங்கும் காணலாம். இறைவனும் சக்தியும் வேறுவேறு அன்று என்பதை உணர்த்தவே சிவபெருமான் பாம்பை மாலையாக அணிந்துள்ளார். திருமால் பாம்பின் மீது பள்ளிக் கொண்டுள்ளார். முருகனின் வாகனமாகிய மயிலின் காலடியில் பாம்பு படம் விரித்து ஆடுகிறது. சக்தி வழிபாடாகிய அம்பிகை வழிபாடு மிகவும் பழைமையுடையது. மிகப் பழங்காலத்திலே பல நாடுகளிலும் பரவியிருத்தல், வேண்டும், இருக்கு வேதத்தில் அன்னை வழிபாடு கூறப்படுகிறது.

இருக்கு வேதத்திற்கும் மிகவும் முற்பட்டது என்பது விளங்கும் சக்தியைச் சிவபெருமானுக்கு மனைவி, திருமாலுக்குத் தங்கை கணபதிக்கும், முருகனுக்கும் தாய் என்பதால் அறுவகைச் சமயங்களில் ஒற்றுமை அமைந்து விளங்குகிறது. அன்னையின் நோக்கம் உயிர்கள் புல், பூண்டு, பறவை, விலங்கு, மனிதர் தேவர் என்று விரும்பிய பிறவிகளையெல்லாம் எடுத்து போகங்களை யெல்லாம் அனுபவித்து முத்தியடைந்தாலே என்பது. அதற்குத்

துணையாக நின்று அருளுபவர் அன்னை பராசக்தி அன்னையே போகத்தையும், முத்தியையும் அளிப்பவள். போகத்தை நுகர வேண்டுமென்ற அவா உள்ள வரையில் அதற்கேற்ற பிறவிகளை எடுத்து இளைத்த பின்பு முத்தி வேண்டுவோருக்கு அவள் சிவகதிக்கு வழிகாட்டி அருள்கிறாள். இவ்வாறு வேண்டுவோருக்கு வேண்டியதை வேண்டியாங்கு வகுத்தருளுகின்ற : காரணத்தால் அவள் அகிலாண்டங்களுக்கும் அன்னையாக விளங்குகின்றாள்.

**சக்தி வழிபாடு**

எங்கும் எதிலும், எங்கென்றும் நீக்கமற்ற நிறை பொருளாகத் திகழ்கின்ற ஆதிசக்தியாகிய பராசக்தி பல்வேறு தேவி அம்சங்களை கொண்டருளி திகழ்கின்றாள். எவர் எவர் எந்தெந்த வைபவத்தைச் சிறப்பாக பெற விரும்புகின்றாரோ (ஒரு நாமம் ஒருருவம் இல்லாத நிலை) அதற்கேற்ற தேவி அம்சத்தையும் திருப்பெயரையும் கொண்டு வெளிப்பட்டு அருள்கிறாள். எங்கும் நிறைந்தப் பொருளாகப் போற்றப்படுகின்ற அந்த ஆதிசக்தி பராசக்தி என்றும், பூரணி என்றும், இராஜ இராஜேஸ்வரி என்றும், மூல பிரகிருதி என்றும் திருப்பெயர் கொண்டருள்கிறாள், முத் தொழிலை செய்யுமிடத்து பிரம்மாணி, வைணவி, உருத்திராணி என்ற திருப்பெயர்களை கொண்டு வெளிப்படுத்துகிறாள். ஈசுவரனுக்கு ஒப்பாகும் போது துர்க்கையாகவும். காலத்தின் வடிவினாலாகும் போது காளியாகவும், வித்தையின் வடிவாகும் போது சரஸ்வதியாகவும் செல்வத்தின் உருவாகும் போது இலட்சுமியாகவும், உலகத்தை காக்கும் போது உலக நாயகியாகவும், புவனேஸ்வரியாகவும் ஆசிதருகிறாள்.

**வாகனங்கள்**

அபிராமி (பிரம்மாணி) அன்னத்தை வாகனமாகக் கொண்டும். மகேஸ்வரி இடபத்தை வாகனமாகக் கொண்டும், கௌமாரி மயிலை வாகனமாகக் கொண்டும் வைணவ கருடனை வாகனமாகக் கொண்டும், நரசிம்மி சிம்ம வாகனத்தைக் கொண்டும். இந்திராணி யானையைக் வாகனமாகக் கொண்டும் வராகி எருமையை வாகனமாக கொண்டும் எழுந்தருளுகின்றனர். சக்தி இலக்குமியாக வெளிப்படும் போது தாமரை ஆசனத்தையும், சாமுண்டியாக எழுந்தருளும் போது பேயினோடும் தோன்றி திகழ்கிறாள்.

தட்சாயணி, தன் தந்தையால் அவமதிக்கப்பட்டுத் தீயில் குளித்து மாண்ட போது அவளது உடலைத் தனது தோழின் மேல் போட்டுக் கொண்டு பரமசிவன் கோரநர்த்தனமாடியதாகவும் அவ்வுடல் 51 பாகங்களாக பிரிந்து தேசத்தின் பல்வேறு இடங்களில் விழுந்து சக்தி பீடங்களாக திகழ்கின்றன என்பது பூரண வரலாறு. இந்த சக்தி பீடங்கள் பாரதநாடு முழுவதிலும் பரவளாக அமைந்து விலங்குன்றது. 64 சக்தி பீடங்கள் என்பது மறபு. அவற்றுள் ஈழமணி திருநாட்டில் வடபால் அமைந்த ஸ்ரீ புகனேஸ்வரி பீடம் என்று அழைக்கப்படுவதே நயினை ஸ்ரீ நாகபூசணி கோவிலாகும். உலகின் பல பாகங்களிலும் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மனின் அடியவர்களும், பக்தர்களும் உள்ளனர். பல்வேறு கிராமங்களிலும் நகரங்களிலும் நாகபூசணி என்ற பெயருடன் சக்தியின் எளிமை இன்று கோலோச்சிவருகின்றது. சிறப்பாக பெண்ணினத்தாரின் விரும்பிய அருள் தரும் மாபெரும் சக்தியாக இன்று நாகபூசனி தாய் பரிமாணித்துள்ளமை காலத்தின் தேவையே எனலாம். அருளின் மகிமை பேரருள் வீச்சு, என்னிய நிறைவேறல் திட சித்தத்துடன் கூடிய நம்பிக்கை, பிணி நீக்கம் சிந்தையில் நினைத்த முற்றி சிவசக்தி தரும் வழிபாட்டாம் நூல்கள் கொண்ட பொருள் நடைமுறையாக நாகபூசணி அம்மன் வழிபாடு வளர்ச்சிபெற்றுள்ளமை மனங்கொளற்பாலது.

மாறும் உயிருள்ள, உயிரற்ற பொருட்களை தன்னகத்தைக்கொண்ட இப் பிரபஞ்சத்தில் நிலையான ஆன்மீக சுகத்தை இம்மைக்கும், மறுமைக்கும் தருவாளென்றால் அப்பெருமைக்குரியவள் சக்தியே அதனால் தான் சக்தி வழிபாட்டிற்கு சிறப்பைக் கொடுத்து மனித வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி, செல்வம் வீரம் என்கின்ற முச்சிறப்புக்களையும் கொடுத்து வழிபடுகிறார்கள். விண்ணை மண்ணை ஆய்வு செய்யும் மேற்கத்திய விஞ்ஞானிகள் கூட அந்த மாபெரும் சக்தியை போற்றியே தாங்கள் காரியத்தை நிகழ்த்துகிறார்கள். உலகத்தைப் பார்த்து அதன் நிகழ்வுகளைப் பார்த்து அறிவியல், அணுகுண்டு இயல் முன்னேற்றங்களைக் கண்டு மூக்கிலே விரல் வைத்துப் பிரமிக்கும் இன்றைய மனிதன் சக்தியாற் புலப்படாத பல உண்மைகள் இருந்தன, இருக்கின்றன, இன்னும் நிகழவுள்ளன, என்பதை அறிய முடியாத வரையுள்ளான் அல்லவா ? அந்த அபார ஞானத்தை அளிப்பது சக்தி ஒன்றுதான்.

உலகின் பெரும் ஞானிகளாவன புராண இதிகாசங்களில் வருபவர்களும், பதிணென் சித்தர்கள், அறுபத்துமூவர் கிரேக்க, யூத. அரேபிய, சீன ஞானிகள் கூட அந்த மாபெரும் சக்திக்குத் தலை வணங்கிப் பல செயற்காரியங்களைச் செய்தனர் செய்து கொண்டு இருக்கின்றனர் என்றால் சக்தியின் அளப்பரிய உண்மை புரியும்.

பாசம்? பிரிவு, கனிவு, கருணை, கடமையுணர்வு, அன்பு, அரவணைப்பு, காதல், அருள், தியாகம், தூய்மை, இரக்கம், மன்னிப்பு ஆகிய அனைத்து நற்குணங்களுக்கும் உறவிட மாயிருப்பவள் அம்பிகை. மாபெரும் சக்தி உபாசகர்களையும், கவிஞர்களையும், வித்துவான்களையும், தியாகிகளையும், வீரர்களையும், மற்றும் விஞ்ஞானிகளையும், மெஞ்ஞானிகளையும் மற்றும் அனைவரையும் உலகிற்கு தந்தவள் தாய்தெய்வமேயாம்.

தெய்வருள் வாழ்க்கைக்கும், வாழ்க்கைக்கப்பாலும், பிரபஞ்சத்திற்கும் பிரபஞ்சத்திற்கப்பாலும், நம்பிக்கைக்கும், நம்பிக்கைக்கப்பாலும், என்றும் நின்றுநிலவும் பெருண்மையென்பதை நாம் அறிந்துணர்தல் வேண்டும். கடவுள் வழிபடுவோருக்கு மட்டுமன்றி வழிபடா தோர்க்கும் இன்னருளை வழங்குபவன் எல்லோருக்கும் சுகம் செய்பவன், விரும்பருள் பற்றவன். அறிவுக்கறிவானவன் இறைவன் என்று குறிப்பிடும் பொழுது அதற்குள் இறைவியும் அடங்குகிறாள் என்பதே சைவசித்தாந்த பேருண்மை. சக்தி பின்னபிலான், எங்கள் பிரான், என்று கூறுகிறது திருவருட்பயன் "எத்திறம் அவனும் நிற்பான் அத்திறம் அவளும் நிற்பாள்" என்கிறது. சிவஞான சித்தியார் இத்தியாகி பேருண்மைகளை எளிமையும், அருளும் வெளிப்படுமாறு அன்புருவாய் உலகை இயக்கும் நாகசக்தி நாக பூஷணியெனத் திகழும் எளிமைத்தாய் ஸ்ரீமதி தர்மபாலன் ஞானகணேஸ்வரி அம்மன் என்பதனை இன்று அம்மனை அறிந்தவர்கள் ஏற்றுமகிழ்வார். அருளுறுவை, அன்புறுவை, அருட்பாவையை, எல்லாம் அவ்வவர் அவரவர் தேவையை ஒட்டியே நேசிப்பார் பூசிப்பர், போற்றுவர் வழிபடுவர், பேணுவர் பாடுவர் பரவுவர் இதுவே உலக இயற்கை தாயிடத்திலே, ஆணவமும் அகந்தையும் மமதையும், வேகமும் புத்திக்கூர்மையும்

உடையவர்களது பருப்பு அவியாது. பின் நிகழ்வதை எல்லாம் முன் அறிபவர் தாய் அதிலும் எழிமையும் அருள்வேகமும் அன்பர் பிணிகளையும் குறிக்கோரும் கொண்ட அம்மன் தாய் வெள்ளவத்தை பெர்ணாண்டோ வீதி ஸ்ரீமதி ஞான கணேஸ்வரி என்பதே மிகைக்கூற்றாகாது. எழிமைத்தாய், இனிமைத்தாய் அன்புத்தாய், அகிழத்தாய், என்று கூறத்தோன்றுகிறது. இன்பத்தாய் எமது துன்பத்தை விடிவித்தாய் என்றெல்லாம் போற்றுகிறோம்.

"அகிலத்தாய்" என மிளிர்பவள் ஸ்ரீ நாகபூசணித்தாய் உலக மாந்தருள் உண்மைத் தாய் என திகழ்ந்து கொழும்பில் வெள்ளவத்தையிலே பெர்ணாண்டோ வீதியில் இருந்து அருள் புரிவர் ஞானகணேஷ்வரித்தாய் தமிழ் தாய்மாரின் உள்ளம் வேதனையிலே கலங்கி திசையறியாது அலமந்து நிற்கின்ற வேளைகளிலெல்லாம் அருளோடிணைந்த புனித தாய்மார் தோன்றி வேதனையுறும் தாய் உள்ளங்களை சாந்திப்படுத்தும் புனிதத்தை காலத்துக்கு காலம் நமது சமூகம் சந்தித்திருக்கிறது. அப்பேற்பட்ட அனுபூதி தாயாக மிளிர்கிறாள் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மனின் அருள் பெற்ற ஞானகணேஷ்வரித்தாய் கண்கண்ட தெய்வமென திகழ்ந்து எம்மை தமது அமுத மொழிகளாலும் அன்பு மொழிகளாலும், அருள் மொழிகளாலும் அற்புதமான சொற்பொழிவுகளாலும், அருள்வாக்கினாலும் மனநெகிழவும் ஆன்மீக அறிவு பெறவும் வைத்து ஆண்டு அருள்புரிகிறார் அம்மாவின் அருள் மொழிகள் அற்புதமயமாவதனை அடியேன் நேரிலே பல தடவைகள் கண்டு கேட்டு வியந்து மெய்மரந்து நின்றேன். "அருளித்தக்கம்" என்பது தாய்மையின் பிரவிக்குணம் எல்லோரிடத்தும், பக்தர்களிடத்தும் அன்பர்களிடத்தும் பொருமையுடனும், மதிப்புடனும் எளிமையுடனும், அளவளாவி அவர் அவர் குறைகளை கேட்டரியும் பதி பக்குவம் அருள் நிலையுடைய மிகவும் போற்றுதற்குரியது. தனக்கென உருவாகத தெய்வம் என்று ஞானகணேஸ்வரி தாயை போட்டினால் அது ஏற்புடையதாகவே அமையும். எதையும் அடியவர்கள்காய்க் தொண்டர்களுக்காய்த் என்று பரித்தியாகம் செய்து அவர்களது விண்ணப்பங்களை கேட்டு மகிமை பெரும் காட்சி கண்டோரனை வரையும் ஒரு கணம் மழைக்க வைப்பதாகமையும், அம்மாவின் பஞனை பாடல்கள் சொல்லிக் கொடுக்கும் முறை அலாதியானது. அமைதியும் பக்தியும் அன்பும் அருளும் கொப்பளிக்கும் இனிய

இன்பத் தமிழினாலே மென்மையும் கனிவும் பக்தியும் மேலோங்கத் தக்க வகையில் ஞானகணேஸ்வரி தாய் பஞனை நடத்தும் அதிஅற்புத வித்தக செயற்முறையை கண்டவர் கேட்டவர் உள்ளம் என்றும் புளகாங்கிதம் அடையும் குரலினிமை கனிவு, நளினம் பக்திச்சுவை, தமிழினிமை என்பன அம்மாவின் பஞனையில் சுருதிக் கூட்டி நாதம் எழுப்பும் அன்பர்கள், பக்தர்களை கட்டி வைக்கும் வகையில் ஞானகணேஸ்வரி தாய் பஞனை நிகழ்த்துவார். ஞானகணேஸ்வரி அம்மையின் அருள் இன்றைய கொழும்புவாழ் தமிழ் பேசும் மக்களது மனதிலே பெரும் நிம்மதியையும் சித்த தெளிவையும், எதிர்கால நம்பிக்கையையும், திடவாழ்வு வாழும் எதிர்வுகூறலையும் நிறுவ வழிகாட்டியுள்ளது. பற்றுருதிமிக்க வாழ்வுக்கு இட்டுச்செல்லும் மகத்தான மனோநிலையை உருவாக்குவதிலே ஞானகணேஸ்வரிக்கு அம்மன் தாயார் முன்னணியிலே திகழ்கிறார். சுவீட்சமும் பிரச்சனைகளிலிருந்து விடுவிக்கும் சக்தியும் தரும் தெய்வீகதாயாகவே ஞான கணேஸ்வரி தாய் நடமாடுகிறாள். அவர் பரிபூரண தாய் முழுமை வாய்ந்த அன்னை என்றெல்லாம் பெண்குலத்தினராலே அன்போடும் மதிப்போடும் அழைக்கப்பட்டு வருகிறார்.

ஞானகணேஸ்வரி அம்மாவின் அருளுரைகள் திருப்பெருகு சிவஞானத்துடன் சம்பந்தப்பட்டது. அருமையான உவமைகள், உருவங்கள், எடுத்துக்காட்டுங்கள் மேற்கோள்கள், அனுபவ உண்மைகள் அனைத்தும் அருளுரையிலே ஆற்றோழுக்காய் இடம்பெறும் ஞானகணேஸ்வரி அம்மாவின் திருவிழிகள் அடியார்களின் முகத்தை மற்றும் இன்றி அகத்தையும் ஆல ஊடுருவி பார்க்கும் தீட்சண்யங் கொண்டவை வாயினின்றும் வரும் அருள் மொழிகள் வாக்குகள் உண்மையும் உயர்வு மிக்க கணவாயமைவன, கேட்பவர்களது கருத்துக்கு மதிப்பளித்து அவர்களின் அங்கீகாரத்தை கேட்டு பெற்றுக்கொண்டதன் பின் தொடர்ந்தும் சொற்பொழிவு ஆற்றும் தனிப்பெரும் திறன் பெரும் தகுதி, ஞான் ஞானகணேஸ்வரி தாயாரிடம் நேரிலே பூசைவழிபாடு சொற்பொழிவுகளில் கண்ட அருமையான பெருமை மிகு காட்சிகள் அம்மா சொற்பொழிகளையும், சமைய தத்துவ நடைமுறை உண்மைகளையும் குறித்து ஆற்றும் கருத்து கருவூலங்கள் பேணி பாதுகாத்த வேண்டியவை. எதிர்கால தமிழினம் பேணிக்கை கொண்டொழுவத்தக்க அற்புதமான பேருரைகள் அவை எழுந்தமானத்தில் அருளுருக்கொண்ட நிலையில் அருட்காப்பென



பெருக்கெடுக்கும்.

ஆன்மீக உரை அம்மாவின் அனுபவத்தினதும் அனுபூதியினதும் வெளிப்பாடே எனலாம், "உனக்கு பொருந்துவதை நீ உண்மை என கண்டு அனுபவித்தவற்றையே பிறருக்கு கூறு.." என்ற உபதேசம் மிகப் பெரிய உண்மை என்பதனை ஞானகணேஸ்வரி அன்னையின் பேருரையைக்கேட்ட ஒவ்வொருவரும் அனுபவத்தினாலேயே அறிந்து இன்புறுவர். இத்தனை சுவையும் உண்மையும் அற்புத தன்மையும், வாய்ந்தது அம்மாவின் தமிழுரை வியப்பில் ஆழ்ந்து அம்மா அவர்கள் பேசியதன் பின் யான் என்னதான் கூறுவேன் என்ற வெறுமை கருத்து வரட்சி என்னை பீடித்து நிற்கின்றமையையும் இக்கட்டரையிலே சுட்டவேண்டும். அத்தகு சொற்பொழிவும் வளமும் வணப்பும், அனுபவமும், அருபூதிரம், நிறைந்தது ஞானகணேசனின் தாயின் சொற்பொழிகள் "தெய்வம்" எமக்கு நேரிலே தெம்பும் திரானியும் தந்து அன்பும் அருளும் சிறந்து அறிவு நலன் தந்து அருளாடல் புரிகிறது. இதனை மதிக்க வேண்டும் போற்றவேண்டும் புகழவேண்டும்.

அத்தெய்வம் நமக்கு துணையென்று நம்பி வழிபட்டு உய்யவேண்டும் அம்மா சொல்லித்தரும் பஜனைப்பாடல்கள் மனதுக்கு இன்பத்தை தருபவை மானுடத் சட்டை தாங்கிய அற்பதங்களை விவரிப்பவை, போற்றுபவை அவற்றை மதித்து எதிர்கால சந்ததிக்கு ஆன்மீக ஈடுபாட்டை ஊட்ட முன்வர வேண்டும் விஞ்ஞானமும் தொழிநுட்பமும் எதற்கும் வினாக்களையே கிளர்த்தும் மறுதலிக்கும், மருக்கும் ஆயினும் இத்தகு நாஸ்திகவாதம் கோலோச்சம் உலகிலே மிகவும் நுண்மையான விடையங்களை தன்னகத்தே கொண்டு நிலைபெறும் சக்தியின் அளப்பெரும் அற்புதத்தை நமது ஞானகணேஸ்வரி தாயிலே காணுகின்றோம் அல்லவா? அவ்வுணர்வே பக்தி உணர்வு, தெய் நம்பிக்கை "அம்பிகையை சரண் புகுந்தால் அதிகாரம் பெறலாம்"

வணக்கம்



# அணிந்துரை

ஓம் சக்தி

அருள்மிகு ஞானஈஸ்வரி தயாரின் ஞான வாழ்வின் பன்னிரெண்டாம் ஆண்டு நிறைவு விழாவை (2009) முன்னிட்டு "வெள்ளவத்தை அருள் மிகு நாகபூசணி அம்மன் ஸேத்திரம் துன்பம் தீர்க்கும் கலியுக ஞானஈஸ்வரி" என்னும் இப்பக்தி நூலின் புதிய பதிப்பிற்கு அணிந்துரை எழுதுவதற்கு நாகபூசணி அம்மனின் திருவருட் கிடைத்தமையை பெரும் பேராக என்னி மகிழ்கின்றேன் இந்நூரலானது ஸ்ரீ காயத்திரி மந்திரம், வெள்ளவத்தை அருள் மிகு நாகபூசணி அம்மன் ஷேஸ்திரத்தின் மூலமந்திரம், திருமுறைகள் அற்புதமான பக்திபாடல்கள், பஜனைப் பாடல்கள், கேதார கௌரி நோன்புக் கதைகள், வரலக்ஷ்மி விரதக் கதைகள், சகலகலா வள்ளிமாலை, அபிராமியம்மை பதிகம், ஐயப்ப சுவாமி தோத்திரங்கள், எல்லாவற்றையும் கொண்டுள்ளது. எனவே இன் நூலை எமது பக்தி நூலாகவும் வழிபாட்டுக் கருவியாகவும் பயன்படுத்தி நல்வாழ்வும் நற்கதியும் பெறுவோமாகுக.

அற்புத சக்தியாம் சநாகபூசனி அம்மன் தேரில் எழுந்தருளி காட்சிக் கொடுத்து எம்மையெல்லாம் ஆனந்த பரவசம் அடைய வைப்பதற்கு திருவுளம் கொண்டுள்ளாள் சக்தியின் மகிமையால் இங்கு வெள்ளவத்தை சேஷ்திரத்தின் தேர்த்திருபணிகள் ஆரம்பமாகியுள்ளன நாகபூசணி தேர்திருவிழாவின் போது அன்பர்கள் பக்தர்கள் பெறும் தன்னை மறந்த ஆனந்த நிலை, பக்தி நிலை, ஆணவம் நீங்கி மனம்முருகி, களிப்புறும் நிலை. இங்கு எமக்கு கிடைக்கப் போகின்றது. பெறுதற்கரிய இத்தேர் திருப்பணி கைந்தல்யததிற்கு எல்லோரும் பங்களிப்பு செய்து மகிழவேண்டும்.

வெள்ளவத்தை அருள் மிகு நாகபூசணி அம்மன் சேஸ்திரத்தின் மூல மந்திரமானது எமக்கு விளங்கக்கூடிய வகையில் தமிழ் மொழியில் உள்ளமையினால் இதனை சதாகாலமும் தெளிவுடன் உச்சரித்து அலவிலா நற்பயனை பெறலாம். இதில் அடங்கியுள்ள சக்தியை நீங்கள் அனுபவத்தினால் மட்டுமே உணரலாம் பக்தியுடனும் நம்பிக்கையுடனும் இம் மந்திரத்தினை உச்சரித்து வருவோமானால் துன்பங்கள் அனலும் முன்னேற்றங்கள்

கிடைக்கும் வியக்கத்தக்கவகையில் நல்லமாற்றங்கள் நிகழும் சிலருக்கு திடீர் நன்மைகளும் சிலருக்கு படிப்படியான நன்மைகளும் எற்படும். இவற்றுள் எந்த வகையான மாற்றத் குழந்தைக்கு நல்லது என்பதை நாகதாய் அறிவாள். அதன் படி பொறுத்தமான இடத்தில் நன்மைகளை நாகதாய் அருள்வாள்.

இந்த ஆலயத்தைப் பற்றி நாம் கேள்விப்பட்ட கணத்திலேயே தாயின் அருட்பார்வையும் அழைப்பும் எமக்குண்டு என உணர்தல் வேண்டும். இவ்வாலயத்தின் ஞானகணேஸ்வரி தாயானவள் நாகபூசணி அம்மனின் அவதார சக்தியாக இருந்து துண்பம் தீர்க்கவரும் எல்லோருக்கும் அருள்வாக்கின் மூலமும் திருநீரு இட்டு வழிகாட்டியும் துன்பங்களை தீர்த்து வருகின்றாள் அன்னை அருள்வாக்கு கூறும் போது நாகபூசணி அம்மனின் குரலைக் கேட்கின்றோம். தாயே திருநீரு அணிந்து விடுகிறாள் தாயே அன்னம் பரிமாறுகிறாள் அருள்வாக்கு நேரத்தில் அமைதியாக இருந்து பக்தியுடன் தாயின் குரலை கேட்க வேண்டும். தாயின் மகிமைகளையும் அற்புதங்களையும் சொல்வதன் மூலம் முற்றாக அறிவிக்க முடியாது அனுபவத்தினால் மட்டுமே. உணர முடியும் துண்பம் நீங்க வேண்டி வரும் அண்பர்களுக்கு அருள்மிகு ஞானகணேஸ்வரி தாயார் ஆசிர் வாத திருநீர் அணிதல் காவற்திருநீரு வழங்குதல், காரிய சித்தித் திருநீர் வழங்குதல், காவல் நூல் கட்டுதல், தேசிக்காய் வெட்டுவதன் மூலம் தடை அகற்றுதல் அருள் இளநீர் வழங்குதல் மூலம் நோய் தீற்றல் போன்ற அருட் செயல்களினால் அன்பர்களின் துண்பம் நீக்குகின்றார்.

ஞானகணேஸ்வரித் தாயானவள் பக்திபூர்வமாக நிகழ்த்தும் அபிஷேகம், பூசைகளில் கலந்துக் கொண்டு அன்பர்கள் பக்தி பரவவசத்தில் மெய்மறந்து இருப்பர் பூசையின் பின்னர் அவதாரத் தாயானவள் குழந்தைகளின் துன்பம் அகலவேண்டி அருள்மிகு நாகபூசணி அம்மனையும் குலதெய்வங்களையும் வேண்டி பிரார்த்தனைகள் செய்து கொண்டே நாகதாயுடன் ஒன்றித்து திருவருளில் திளைத்து பெரும் கருணையுடன் ஒன்றித்து குழந்தைகளுக்கு திரு நீறு வழங்கி ஆசீர்வதிப்பாள். துன்பம் நீங்கும் வழிமுறைகளை கூறி அருளுவாள் ஆதரிக்குமாறு கூறி

திருநீறும் தருவாள் இத்திருநீற்றை நாம் பக்தியுடன் பெற்று வழிபாட்டறையில் வைத்து மலர் வைத்து வணங்கி வரல் வேண்டும். வேண்டுமான பயனை பெறலாம். நாம் நினைப்பதிலும் பார்க்க கூடிய நன்மைகளை தரும் தாய் அல்லவா?

மானிட வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது நியதி துன்பம் வரும் போது துவண்டுவிடுகிறோம். ஏன் ? யான் எனது என்று நினைத்துக்கொள்கின்றோம். நமது வாழ்வு என்று நினைத்துக்கொள்கின்றோம். நமது வாழ்வு என்று நாமே திட்டமிடுகிறோம் ஆனால் எல்லாமே மாறுகின்றன முக்காலத்தையும் உணர்ந்த ஆதிசக்தியினால் எதனையும் நிகழ்த்த முடியும். மாற்ற முடியும். நிகழாது இருக்க செய்யமுடியுமென்பதை அறியாமல் அல்லற்படுகின்றோம். துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு எம்மை முற்றுமுழுதாக நாகதாயிடம் சமர்பித்து பூரணமாக சரணடைந்து விட்டால் தாயே எம்மை வழிநடத்தி நல்வாழ்வு தருவாள்.

பெண்களுக்கே உரித்தான கௌரி நோன்பு பூசை நிகழ்வுகட்கு இத்சேத்திரம் மிகவும் பொருத்தமான இடம். இங்கு அந்நிகழ்வுகளில் கலந்து கொள்வோர் அதனை நன்கு உணர்வர் இது அருள்மிகு நாகதாயின் ஒரு சக்தி பீடம் அல்லவா ?

இவ் ஆலயத்தில் வெள்ளி, செவ்வாய், பூரணை தினங்களிலும் மற்றும் சதுர்த்தி விரதம், நவராத்திரி விரதம், கேதார கௌரி விரதம், நாகபூசணி அம்மன் தேர் உற்சவ தினம், அம்மாவின் ஜனன தினம், ஆகிய நாட்களில் விசேட சக்தி வழிபாட்டு பூசைகள் நடைபெறுகின்றன. அம்மாவின் ஞான வாழ்வின் வருடாந்த உற்சவத்தின் போது பாற்குட பவனி, விஷேட அபிஷேகம், பூஜைகள், அன்னதானம் என்பன மிக சிறப்புடன் நடந்து வருகின்றன. சரியை, கிரியை, யோகம் ஞானம். ஆகிய எல்லா சன்மார்க்கங்களும் ஒன்றிணைந்த திருத்தலமாக இவ்வாலயம் விளங்குகின்றது. சிறு பிள்ளைகள் முதல் பெரியோர்கள் வரை தொண்டர்களாக இணைந்து பணிசெய்து மகிழ்ந்து நல்வாழ்வு பெறுகின்றனர். அம்மாவின் பஜனையானது பக்தியுனர்வையூட்டி இறையுணர்வில் ஆன்மாவை இழையிக்கச்

செய்கின்றது.

"அன்பும் அறனும் உடைதாயின் இவ்வாழ்வின் பண்பும் பயனும் அது"

என்று திருவள்ளுவ பெருமான் அருளியுள்ளார் அதன் படி இல்லறவாழ்விலே அறநெறியில் நின்று திரு த. தர்மபாலன் அவர்களும் ஸ்ரீமதி ஞானகணேஸ்வரி அம்மா அவர்களும் பிள்ளைகளுடன் இருந்து தெய்வீக பணிகள் செய்து வருகின்றனர். இவர்கள் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்ந்து அருட்பணி புரிய நாகபூசணி அம்மன் அருட்கடாச்சம் என்றும் உண்டு.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத் தவர்க்கு"

என்பது திருக்குறள் இதற்கமைய வருடத்தில் மூன்றில் ஒரு பங்கு நாற்களுக்கு அம்மா அன்னதானம் வழங்கி மகிழ்கின்றார். அன்பர்களும் இப்பணிக்கு பங்களிப்பு வழங்கி மகிழ்வுறலாம் நயினையில் ஓர் அமுத சுரப்பி போன்று இங்கு வெள்ளவத்தையில் போன்று இத் திருத்தலத்தில் மடாலயம் ஓர் அக்ஷயசுரபியாக விளங்குகிறது.

இந்த அருள் நூலை ஒவ்வொருவரும் குடும்பத்தவரும் பெற்று இதனை பக்திநூலாகவும் பஜனை வழிபாட்டு நூலாகவும் ஞானமார்க்கத்திற்கான கருவியாகவும் பயன்படுத்த வேண்டும்.

நல்லனவெல்லாம் தரும் தாயிடம் சரணடைந்து துன்பம் நீங்கி வாழ்வோமாக

வணக்கம்

**வெள்ளவத்தை**
**02-12-2009**

**சி. துரையப்பா**
**கணித விரிவுரையாளர்**
**கொழும்பு பல்கலைக்கழகம்.**

# பஞ்சபுராணம்

## தேவாரம்

அரியானை அந்தணர் தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங்கோனை மற்றைக்
கரியானை நான் முகனைக் கனலைக் காற்றைக்
கனை கடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே !

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப் பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க் கெடுத் துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரியாயே !

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே
உணர்வு சூள் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயே
தொண்டனேன் விளம்புமா விளம்பே !

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கடத்தொலி யேத்தொலி
எங்குங் குழாம் பெருகி
விழலொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகு திரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே !

## புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம்
– போற்றி போற்றி

## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புலியத னாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர் கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே !

## பிள்ளையார் பாடல்

ஐந்துகரங்களுடையவன் விநாயகனே - எமக்கு
அவன் வெள்ளம் பாயச் செய்வார் விநாயகனே
பஞ்ச முகம் கொண்டவர் விநாயகனே - எமக்கு
பால் வெள்ளம் பரப்பிடுவான் விநாயகனே
(ஐந்து கரங்கள் உடையவன்)

ஆனந்த தாண்டவமே விநாயகனே - அன்பு
நெறியில் நிற்பனே விநாயகனே - எங்கள்
விக்கினங்னள் போக்கும் விநாயகனே
எமக்கு வேண்டும் வரம் தருபவனும் விநாயகனே
(ஐந்து கரங்கள் உடையவன்)

சங்கடங்கள் தீர்ப்பவனும் விநாயகனே
சந்ததியை காத்திடப்பா விநாயகனே
சாதி மத பேதமில்லை விநாயகனே - எமக்கு
சாந்தி தனைத் தந்திடப்பா விநாயகனே
(ஐந்து கரங்கள் உடையவன்)

ஆலயங்களில் முன்னிருப்பவனும் விநாயகனே
நற்கருமம் அருளுபவனும் எங்கள் விநாயகனே
நல்லன மதி தருபவனும் விநாயகனே - இந்த
பாவிகளைத் காத்தருள வாருமையா விநாயகனே

**வினோத் ராஜ் சத்யா**
கைதடி



## முருகன் பாட்டு

வேலவனே வேலவனே வாரும் வாரும் - எங்கள்
வேதனையைத் தீர்த்தருளவாரும் வாரும்
வேண்டும் வரம் தருபவனே வாரும் வாரும் - எங்கள்
வெற்றிக்கு வழி ஒன்று கூறும் கூறும்
(வேலவனே வேலவனே)

நல்லூரில் வீற்றிருப்பவனே வாரும் வாரும் - எமக்கு
நல்வாழ்வு தந்திடவே வாரும் வாரும்
ஞானமுகம் கொண்டவனே வாரும் வாரும் - எமக்கு
ஒளி நடனம் செய்திடவே வாரும் வாரும்
(வேலவனே வேலவனே)

கற்பூர சோதியிலே வாரும் வாரும் - எமக்கு
கருணைதனை தந்திடவே வாரும் வாரும்
கந்தன் என்று அழைத்திடவே வாரும் வாரும் - எமக்கு
காட்சிதனை தந்திடவே வாரும் வாரும்
(வேலவனே வேலவனே)

பச்சை வேட்டி பளபளக்க வாரும் வாரும் - இந்த
பாவிகளைக் காத்திடவே வாரும் வாரும்
சரணம் சரணம் ஐயா வாரும் வாரும்
பொற்பாதம் சரணம் ஐயா வாரும் வாரும்
(வேலவனே வேலவனே)

**வினோத் ராஜ் சத்யா**
கைதடி

## அம்மன் பாட்டு

நயினைதனில் கோவில் கொண்டாய் நாகபூசணி
நம்பினோரை காத்திடம்மா நாகபூசணி - அம்மா
நல்லமைதி தந்திடம்மா நாகபூசணி - அம்மா
நல்வழி வாழவிடு நாகபூசணி

(நயினை தனில்)

கண்களில் நீர் பெருகுதம்மா நாகபூணி - எமக்கு
கடமைகளை செய்திடவே நாகபூசணி
கலியுகத்தில் எம்மையே நாகபூசணி - அம்மா
காத்தருள வேண்டும் அம்மா நாகபூசணி

(நயினை தனில்)

நாகம் மீது ஏறி வந்தாய் நாகபூசணி
ஒளிநடனம் புரிபவளும் நாகபூசணி
நாட்டில் உள்ள மக்களையே நாகபூசணி
ஞானத்துடன் வாழவிடு நாகபூசணி

(நயினை தனில்)

வேப்பிள்லையை தான் எடுத்து நாகபூசணி
வேதனையை தீத்திடம்மா நாகபூசணி - அம்மா
வேண்டும் வரம் கேட்பவருக்கு நாகபூசணி
வேண்டுதலைத் தீர்த்திடம்மா நாகபூசணி

(நயினை தனில்)

**வினோத் ராஜ் சத்யா**
கைதடி

## அம்மன் பாட்டு

தாயே என் தாயே என் நாகதாயே
தாலி வரம் கொடுப்பவளும் நாகதாயே
தாயாய் இருப்பவளும் நாக தாயே
தாமதிக்க வேண்டாம் அம்மா நாகதாயே
(தாயே என் தாயே)

தாயே என் தாயே என் நாக தாயே
தாங்கி நின்று காப்பவளும் நாக தாயே
தாளம் போட்டிடுவோம் நாகதாயே
தாயாய் வந்திடம்மா நாகதாயே
(தாயே என் தாயே)

தாயே என் தாயே என் நாக தாயே
தர்மம் தந்து காத்திடுவாள் என் நாகதாயே
கடலோரம் வீற்றிருந்து நாகதாயே
காந்தருள் புரிவாய் அம்மா நாகதாயே
(தாயே என் தாயே)

தாயே என் தாயே என் நாகதாயே
கடமைகளை செய்திடவே நாகதாயே
கண்களில் நீர் பெருகுதம்மா நாக தாயே
சரணம் சரணம் அம்மா நாகதாயே
(தாயே என் தாயே)

**வினோத் ராஜ் சத்யா**
கைதடி

## அம்மன் பாடல்

கடலோரம் வீற்றிருந்து எங்கள் அம்மன் தாயே
கலியுகத்தில் எம்மையே எங்கள் அம்மன் தாயே
காத்தருள வேண்டும் அம்மா எங்கள் அம்மன் தாயே
காலில் சிலம்புடனே எங்கள் அம்மன் தாயே
(கடலோரம் வீற்றிருந்து)

நாலு சுற்றும் சமுத்திரமாம் எங்கள் அம்மன் தாயே
நடுவிலே சிம்மாசனம் எங்கள் அம்மன் தாயே
நாடே அழியுதம்மா எங்கள் அம்மன் தாயே
நம்மை வந்து காத்திடம்மா எங்கள் அம்மன் தாயே
(கடலோரம் வீற்றிருந்து)

தடைகள் அகற்றிடவே எங்கள் அம்மன் தாயே
தாலியைத் தந்திடம்மா எங்கள் அம்மன் தாயே
குழந்தை கலங்குகிறேன் எங்கள் அம்மன் தாயே
காதில் கேட்கலையா எங்கள் அம்மன் தாயே
(கடலோரம் வீற்றிருந்து)

தஞ்சம் புகுந்திடவே எங்கள் அம்மன் தாயே
தாமதிக்க வேண்டாம் அம்மா எங்கள் அம்மன் தாயே
தர்மம் தனை தந்திடம்மா எங்கள் அம்மன் தாயே
உன்னையே நம்பி வந்தேன் எங்கள் அம்மன் தாயே
(கடலோரம் வீற்றிருந்து)

ஊக்கத்தை தந்தாய் அம்மா எங்கள் அம்மன் தாயே
கல்வி தனை கற்றிடவே எங்கள் அம்மன் தாயே
பட்டத்தையும் தந்தாயம்மா எங்கள் அம்மன் தாயே
வேலை தனை தந்திடம்மா எங்கள் அம்மன் தாயே
(கடலோரம் வீற்றிருந்து)

பட்டு பளபளக்க எங்கள் அம்மன் தாயே
பறந்தோடி வந்திடம்மா எங்கள் அம்மன் தாயே
செம்பவளவாயழகி எங்கள் அம்மன் தாயே
செய்திகளை சொல்லிடம்மா எங்கள் அம்மன் தாயே
(கடலோரம் வீற்றிருந்து)

வேப்பிளையில் வீற்றிருந்து எங்கள் அம்மன் தாயே
வேண்டுதலை தீர்த்திடம்மா எங்கள் அம்மன் தாயே
திருநீறு கொடுத் தெல்லோ எங்கள் அம்மன் தாயே
தொல்லைகளை தீர்த்திடுவாள் எங்கள் அம்மன் தாயே
(கடலோரம் வீற்றிருந்து)

வேதனையைப் போக்கி அல்லோ எங்கள் அம்மன் தாயே
வெற்றிதனை தந்திடுவாள் எங்கள் அம்மன் தாயே
சரணம் சரணம் அம்மா எங்கள் அம்மன் தாயே
பொற்பாதம் சரணம் அம்மா எங்கள் அம்மன் தாயே
(கடலோரம் வீற்றிருந்து)

**வினோத் ராஜ் சத்யா**
கைதடி

## அம்மன் பாட்டு

அம்மா அம்மா எம் தாயே அற்புதம் தந்து எம்மை காப்பாயே
இம்மாநிலத்தில் நீதானே எம்மை காக்கும் தாய் தானே
இங்கே நாம்படும் வேதனையை நீயே நின்று பொறுத்திடுவாய்
எல்லாம் நீயே காத்திருந்தும் ஏனோ இந்த வேதனையாம்
(அம்மா அம்மா)

எல்லாம் நீயே செய்திடம்மா தாயே என்னை வாழ விடு
எல்லா அருளும் உந்தனுக்கே புதுமை ஒன்றை செய்திடம்மா
இரவும் பகலும் வேதனைகள் ஏனோ என்னை வாட்டுகின்றாய்
நீயே தாயாய் நின்று எம்மை காத்தருளும் தாயல்லோ
(அம்மா அம்மா)

எல்லாச் செயலும் உந்தனுக்கே கடமைச் செய்ய வந்திடம்மா
காலம் போக விடவேண்டாம் அருளை புரிந்திடு தாயே
தாலி தனை தந்தென்னை தக்கவழி வாழ விடு
பொல்லா வினைகள் போக்கி எம்மை நல்லாய் வாழ விடு
(அம்மா அம்மா

எல்லாம் சொல்ல முடியாது துண்பம் தனை நீக்கிடம்மா
இன்பம் தந்து எந்நாளும் நலமாய் வாழ விடு தாயே
துள்ளி வந்து காத்திடவே துணையாய் எனக்கு இருதாயே
குழந்தை வடிவில் வந்தென்னை காத்தருள வாரும் அம்மா
(அம்மா அம்மா)

எல்லா துயரும் போக்கி என்னை செழிப்பாய் வாழ விடு தாயே
உன்னை தவிர எனக்கு துணையாய் யாரும் இல்லையம்மா
தாமதிக்க வேண்டாம் அம்மா உடனே விரைந்து வாரும் அம்மா
எல்லா அருளும் உந்தனுக்கு துள்ளியே வந்து நில்லுமம்மா
(அம்மா அம்மா)

எல்லா உயிரும் உந்தனுக்கு ஏந்தி எடுக்க வாரும் அம்மா
சொன்ன சொல்லை காத்திடுவாள் சோதியாய் வந்து நில்லம்மா
கல்விதனை கற்றிடவே கருணை எனக்கு தாருமம்மா
எல்லாம் உந்தன் அருளம்மா என்றும் உன்னை போற்றிடுவேன்
(அம்மா அம்மா)

வெள்ளவத்தையில் வீற்றிருந்து வரும் துன்பத்தை காத்திடம்மா
என்னை தவிக்க விட வேண்டாம் காத்தருள வாரும் அம்மா
சூலம் தன்னை ஏற்றிக்கொண்டு ஓடி ஆடி வாரும் அய்யா
குடிசைதனில் வீற்றிருந்து அருளும் பொருளும் தரும் தாயே
(அம்மா அம்மா)

தேசம் எல்லாம் அழியுதம்மா தேடியே வந்து நில்லம்மா
நல்ல நாகமாய் வடிவெடுத்து நம்பினோரை காத்திடம்மா
நெற்றியிலே குங்குமம் தான் நிலைத்திருக்க வேண்டும்மா
வேப்பிலையில் வீற்றிருந்து வேதனையை தீர்த்திடம்மா
(அம்மா அம்மா)

**வினோத் ராஜ் சத்யா**
கைதடி

## அருள் கிடைக்க வேண்டி பாடும் பாடல்

அருள் வேண்டி அலருகிறேன் ஓடி வா அம்மா
அன்னை பராசக்தியும் நீயே அம்மா - உன்
அடியாரை காத்திட ஓடி வா அம்மா - உன்
அன்புதனை தந்திடவே ஓடி வா அம்மா

(அருள் வேண்டி)

கடலோரம் வீற்றிருந்து ஓடி வா அம்மா - எம்மை
அணைத்திடவே இங்கு ஓடி வா அம்மா
அன்புள்ள பக்தர்கள் நாங்கள் அம்மா - எம்மை
ஆர்வத்தில் ஆழ்த்தி விட ஓடி வா அம்மா

(அருள் வேண்டி)

அம்மா என்று சொன்னவுடன் ஓடி வா அம்மா - உன்
ஆறுதலை தந்திடவே ஓடி வா அம்மா
பண்பு கொண்டு அழைக்கின்றேன் ஓடி வா அம்மா - உன்
பாவிகளை காத்திடவே ஓடி வா அம்மா

(அருள் வேண்டி)

அலை அலை எங்கள் முன்னே ஓடி வா அம்மா-எம்மை
அருகிருந்து காத்திடவே ஓடி வா அம்மா
உன்னையே நம்பி வந்தேன் ஓடி வா அம்மா - எம்மை
உறுதியுடன் காத்தருள ஓடி வா அம்மா

(அருள் வேண்டி)

அருள் கொண்டு நிற்கின்றாய் ஓடி வா அம்மா - உன்
ஆனந்தத்தை காட்டிடவே ஓடி வா அம்மா
எம்முன்னே அருள் தர ஓடி வா அம்மா - உன்
ஆலயத்தை காத்திடவே ஓடி வா அம்மா
(அருள் வேண்டி)

சூலத்தை ஏந்திக் கொண்டு ஓடி வா அம்மா - நீ
துள்ளியே எங்கள் முன்னே ஓடி வா அம்மா
எண்ணற்ற துன்பம் அம்மா ஓடி வா அம்மா - நீ
தூள்தூளாய் போக்கிடவே ஓடி வா அம்மா
(அருள் வேண்டி)

காலில் சிலம்புடனே ஓடி வா அம்மா - நீ
காத்தருள் புரிந்திடவே ஓடி வா அம்மா
கருணை உள்ள தெய்வம் அம்மா ஓடி வா அம்மா - நீ
கருணையைத் காட்டிடவே ஓடி வா அம்மா
(அருள் வேண்டி)

தஞ்சம் புகுந்திடவே ஓடி வா அம்மா - நீ
தருமம் தனை தந்திடவே ஓடி வா அம்மா
வேண்டுதலை தீர்த்திடவே ஓடி வா அம்மா - நீ
வெற்றிதனை தந்திடவே ஓடி வா அம்மா
(அருள் வேண்டி)

**வீனோத் ராஜ் சத்யா**
கைதடி

## பிள்ளையார் பாடல்

கடல் ஓரம் வீற்றிருக்கும் விநாயகனே - எமக்கு
கருணை தனை தந்திடப்பா விநாயகனே - நாம்
கூவியழைப்பது உன்காதில் கேட்கலையா
கூடி வந்து நிற்கிறோம் காத்திடப்பா
(கடல் ஓரம் வீற்றிருக்கும்)

கந்தனின் அண்ணனான விநாயகனே - எமக்கு
முன் வந்து காட்சி தாரும் அப்பா
செல்வம் தனை தந்திடவே வாருமப்பா - என்னை
ஏழையாக வாழ விடவேண்டாம் அப்பா
(கடல் ஓரம் வீற்றிருக்கும்)

மோதகக் கணபதியே விநாயகனே - எனக்கு
வெற்றிதனைத் தந்திடப்பா விநாயகனே
எலியில் ஏறிவந்த விசாயகனே - எனக்கு
ஏற்றத்தை தந்திடப்பா விநாயகனே
(கடல் ஓரம் வீற்றிருக்கும்)

அறுகில் அமர்பவன் விநாயகனே - ஆனந்த
தாண்டவம் காட்டிட வாருமப்பா
சொல்லாத துன்பமப்பா என் நெஞ்சில்
தோன்றி வரம் தர வாருமப்பா
(கடல் ஓரம் வீற்றிருக்கும்)

விசாதனை தந்திடவே வாரும் அப்பா - எனக்கு
வெளியூரில் வாழ்ந்திடவே வழி தாரும்மப்பா
வேதனையோடு வருபவர்களுக்கு பிள்ளையாரே
வெற்றிதனை கொடுத்திடவே வாரும் அப்பா
(கடல் ஓரம் வீற்றிருக்கும்)

**தியாகராசா ஈஸ்வரி**
கொழும்பு

## பிள்ளையார் பாடல்

பிள்ளையார் சுழிபோட்டு நீ நல்லதை தொடங்கி விடு
வள்ளலார் கணபதியில் நல் ஆசியும் அருளும் கிடைத்துவிடும்
ஊர்தோறும் குளத்தடியில் நம் கணபதி அமர்ந்திருப்பான்
ஒவ்வொரு மனிதனிலும் நல் உள்ளத்தில் குடியிருப்பான்
(பிள்ளையார் சுளிபோட்டு)

எல்லோரும் நலம்காண எண்ணுகின்ற மனிதனுக்கு என்
நாளும் விநாயகனின் திருவருள் துணை இருக்கும்
அவன் அருள் நலம் சேர்க்கும்
பெற்றோருக்கு மேலான உலகம் இல்லை என்றார்
(பிள்ளையார் சுளிபோட்டு)

கற்றோருக்கு மேலான பெரியோர் இல்லை என்றார்
நர்த்தன விநாயகனை நாமும் தொழும்போது
அர்த்தம் புரிந்துவிடும் திருவருள் துணை இருக்கும்
அவன் அருள் நலம் சேர்க்கும்
(பிள்ளையார் சுளிபோட்டு)

ஒரு நாளில் ஒரு வேளை ஐங்கரனை நினைத்து விடு
உயிர்கள் யாவும் உந்தனுக்கே சொந்தம் என்று நினைத்து விடு
நி இன்று வாழ்ந்து விடு பலரையும் வாழவிடு
இந்த எண்ணம் உனக்கிருந்தால் தினம் அருள் துணையிருக்கும்
அவனருள் நலம் சேர்க்கும்
(பிள்ளையார் சுளிபோட்டு)

**சிவகொழுந்து**
குடும்பம்

## விநாயகர் பாடல்

நானிலம் போற்றும் நாயகனே
நல்லவர் உள்ளத்தின் ஒளி விளக்கே
தம்பிக்கு துணை நின்ற கணபதியே
தாழ் பணியுமெம்மைக் காத்திடய்யா

(நானிலம் போற்றும்)

சுற்றி வந்திடும் துன்கங்களைத்
துரத்தி ஓட்டிட வந்திடுவாய்
சுற்றமும் சூழலும் உன்னருளால்
ஏற்றமடைத்திட வேண்டுமைய்யா

(நானிலம் போற்றும்)

ஆதி சிவனின் மூத்தோனே
அன்னை சத்தியின் திருமகனே
பாதி வழியில் தவிக்கின்றோம்.
பார்த்து நல்வழி காட்டிடய்யா

(நானிலம் போற்றும்)

கருவிலே வளர்ந்திடும் குஞ்சுகளும்
உருவம் சிதைந்து அழிகின்றன
சீறி வந்திடும் கொலைப் பகையே
உன் கத்தியினாலே சிதைத்திடய்யா

நானிலம் போற்றும்

வாடித் துடித்திடும் மக்களுக்கு
ஓடி வந்து அருளிடுவாய்
நாடி வருகின்றோம் உன்னடியை
நாளும் பொழுதும் துணையிரய்யா

(நானிலம் போற்றும்)

கொழும்பு மாநகரில் குடிகொண்டாய்
கொடுமைகள் தன்னையே துடைத்தெறிவாய்
நம்பிக்கையுடனே இருக்கின்றோம்.
விநாயகனே எம்மைக் காத்திடய்யா

நானிலம் போற்றும்

## விநாயகர் பாடல்

கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கஜமுக ஐங்கர கணபதி ஓம்
குண பதியாம் சிவணபதி ஓம்
குண்டலி மண்டல கணபதி ஓம்
மூஷிக வாகன கணபதி ஓம்
மூலப் பிரணவ கணபதி ஓம்
மாசறு தேசிக கணபதி ஓம்
வல்லப மோகன கணபதி ஓம்
விக்னவிநாயக கணபதி ஓம்
விகசிதி நகைமுகை கணபதி ஓம்
உக்ர தலாபல கணபதி ஓம்
ஊத்து நந்தன கணபதி ஓம்

பார்வதி பாலா கணபதி ஓம்
பாசிவஞான கணபதி ஓம்
பூர்ண விநாயக கணபதி ஓம்
புவண புரந்தர கணபதி ஓம்
சுத்த சதாசிவ கணபதி ஓம்
சுந்தர சஞ்சர கணபதி ஓம்
நித்திய தத்துவ கணபதி ஓம்
நிர்மல சின்மய கணபதி ஓம்

## பிள்ளையார் பாடல்

ஓம் என்னும் பிரணவமே விநாயகா
உமையவனின் பாலனே விநாயகா
தேவர் மூவர் போற்றும் வேத விநாயகா எங்கள்
தேவாதி தேவனே விநாயகா
வல்வினைகள் தீர்க்கும் பர்த்தி விநாயகா
வேண்டும் வரம் தந்திடும் விநாயகா
மௌனத்தின் முழுப்பொருளே விநாயகா
முக்கண்ணன் மைந்தனே விநாயகா
வேண்டும் வரம் தந்திடும் விநாயகா

## அம்மன் பாட்டு

அம்மா அம்மா நாகம்மா
அருளை அள்ளித் தந்திடம்மா
வெள்ளவத்தையில் வாழும் நாகம்மா
நல் ஒளியெல்லாம் தாருமம்மா

(அம்மா அம்மா)

வெள்ளவத்தையில் வாழும் நாகம்மா
நாகபூசணி நீ அம்மா
நாகம் குடைகீழ் அமர்ந்தவளே
நாகபூசணி தாயும் அம்மா

(அம்மா அம்மா)

மஞ்சம் ஏறி வந்திடுவாய்
மக்கள் குறைகள் தீர்த்திடுவாய்
மக்கள் கூட்டம் கண்டுவிட்டோம்
மகிழ்ச்சியோடு பாடிடுவோம்

(அம்மா அம்மா)

தேரில் ஏறி வந்திடுவாய்
தேசம் எல்லாம் அருள் தந்திடுவாய்
பாடி மகிழ்ந்து உன் அடியில்
பக்தியுடன் நாம் சென்றிடுவோம்

(அம்மா அம்மா)

அன்னம் புசித்திடும் நாகம்மா
ஞான சுரபி ஆனவளே
அமுதினை அள்ளித் தந்திடுவாய்
அரும்பசி எல்லாம் போககிடுவாய்

(அம்மா அம்மா)

எல்லா வினையும் தீர்ப்பவளே
எங்கள் துயரினை துடைத்திடுவாய்
நயினையில் வாழும் நாகம்மா
நாக பரமேஸ்வரியே

(அம்மா அம்மா)

## துன்பம் தீர்க்கும் கலியுக

## ஞான ஈஸ்வரித் தாயின் மகிமை

கலியுகத்தில் எம்மைக் காப்பதற்காக அவதரித்த செல்வத் தாயாக ஞானஈஸ்வரித் தாய் விளங்குகின்றா பெண் தெய்வங்கள் அனைத்தினதும் சாயலைக் கொண்ட எனது தாய் என்றால் அது ஞான ஈஸ்வரி தான் தெய்வத்தின் பெருமையை விரல்விட்டு எண்ணிச் சொல்ல முடியாது அதே போல எங்கள் தாயாரும் திகழ்கின்றா ஒன்றும் தெரியாத குழந்தைகளுக்கு பல புத்திமதிகளைச் சொல்லி நல்வழிப்படுத்துகின்ற தாயாகவும் ஞான ஈஸ்வரித் தாய் விளங்குகின்றா பக்த கோடிகள் பல இருந்தாலும் அம்மன் தனது சிறிய இடத்தில் அவர்களை வைத்து ஒவ்வொரு துன்பத்தையும் தனக்கு வந்த துன்பம் போல ஏற்று பக்த கோடிகளின். துன்பங்களை அமைதியாக இருந்து கேட்டு அகற்றி வைக்கும் பெருமைக்குரிய தாயாக ஞான ஈஸ்வரி தாய் திகழ்கின்றா.

பன்னிரெண்டு ஆண்டுகளாக தனது தெய்வத் தன்மையை வெளிப்படுத்தி அவதியுறும் மக்களை காத்து கல்வி இல்லாதவர்களுக்கு கல்வியையும், திருமண மில்லாதவர்களுக்கு திருமணம். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தையையும் வேலையில்லாதவர்களுக்கு வேலையும், பேசாதவர்களை பேச வைக்கும் தன்மை, வெளியூர் செல்வதற்கு தடையாக இருந்தால். தடையகற்றி வெளியூர் அனுப்பி வைத்தல், வைத்தியரால் தீராத நோயை மாற்றி வைத்தல், அறுவை சிகிச்சையை இலகுவாக மாற்றி வைத்தல் கொடுத்த வாக்கை வென்று கொடுத்தல், போன்ற அற்புதங்களை திரு நீறு, தேசிக்காய், நீர் கொண்டு அகற்றி வைக்கும் பெருமையை ஞான ஈஸ்வரித் தாய் பெற்று விளங்குகின்றா.



சதுர்த்தி, பௌர்ணமி செவ்வாய், வெள்ளி புரட்டதிச் சனி, நாகபூசணி உற்சவக் காலம் ஆவணி ஞாயிறு போன்ற தினங்களில் பக்த கோடிகளின் பசியைப் போக்கி அற்புதமாக இன்சொல் பேசி அழகாக வழியனுப்பி வைப்பா எல்லாக் குழந்தைகளையும் தன் பிள்ளை போல மதித்து நடக்கும் தெய்வத் தன்மை கொண்டவா தடைப்பட்டிருக்கும் தொடர்பை விரைவில் வர வைத்து அன்னிய ஒன்னியாக இருக்கச் செய்வா தனது திருக்கரங்களால் எல்லா மக்களுக்கும் களையைக் காட்டிக் கொள்ளாமல் அன்பாக உணவினைக் கொடுக்க சிறந்த தெய்வமாக எல்லோராலும் போற்றப்படுகின்ற தாய் என்றால் அது ஞான ஈஸ்வரி தாய் தான் வேறு எந்தத் தெய்வமும் இப்படியான சேவையைச் செய்யமாட்டார்கள்.

12வது வருடம் நாகபூசணி அம்மன் விடை கொடுத்தமையால் எங்கள் தாயார் வீதியில் இறங்கி எல்லோருக்கும் அருட்காட்சி தேரிலே கொடுக்க இருக்கின்றா இந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றது அம்மனின் அற்புதம் மிகவும் பெரிது இதனை எண்ணில் அடக்க முடியாது அவ்வளவு பெரிய அற்புதங்களைச் செய்த தாயாரின் பொற்பாதங்களை தொழுது கொண்டு கலியுக ஞான ஈஸ்வரித் தாயின் மகிமையைக் முடிக்கின்றேன்.

கலியுக தாயே அம்மா சரணம் சரணம் தாயே
பொற்பாதம் சரணம் சரணம் கலியுத தாயே அம்மா

**வினோத்ராஜ் சத்தியா**
கைதடி

## அம்மன் பாடல்

கோல விழி மின்னும் ஞான முகம் காண
ஆவலுடன் வந்தோம் ஈஸ்வரியே
பல நூறு வடிவங்கள் கொண்டாய் அம்மா
அதில் உந்தன் அருளாட்சி கண்டோம் அம்மா
தாயே கருமாரி அம்மா
தஞ்சம் உந்தன் பாதமம்மா
எங்கும் அணிந்திடும் உள்ளம் நிறைந்திடும்
மங்கள ரூபினே
எங்கும் நிறைந்த செல்வம் அழிந்துடும்
செல்வ மனோகரியே (கோல விழி மின்னும்)

காப்புகட்டி விரதம் ஏற்று கொண்ட போது
கண்ணுக்குள்ளே நீயும் கலந்ததென்ன
கோயிலுக்கு முன்னே தீ மிதிக்கும் போது
காலுக்குள்ளே நீயும் குளிர்ந்ததென்ன
தீ யாகி நீராகி நிழலாகினாய்
உடலாகி உயிராகி நியமாகினாய்
தாயே கருமாரியம்மா தஞ்சம் உந்தன் பாதமம்மா
(கோல விழி மின்னும்)

வேப்பமரந்தன்னை சுற்றி வரும் போது
புற்றுக்குள்ளே பாம்மபாய் பார்த்திருப்பாய்
ஊத்துகின்ற பாலை உண்ட பின்பு தாயே
எங்கள் குலம் செழிக்க வாழ்ந்திடுவாய்
குறி மேடை எங்கும் உன் அரசாட்சிதான்
வருகின்ற அருள்வாக்கு உன்வாக்குத்தான்
தாயே கருமாரியம்மா தஞ்சம் உந்தன் பாதமம்மா

கோல விழி மின்னும்

உடமதை காட்டி உன்னை அழைத்ததுமே
குலமதை தாங்கி வருவதென்ன
உடல் எங்கும் சிலுக்கும் உடுக்கையின் ஓசை
கேட்டவுடன் ஆடிமகிழ்வதென்ன
மானாட மயிலாட மண்ணாடுமே
நீ ஆட சிவம் ஆட விண் ஆடுமே
தாயே கருமாரியம்மா தஞ்சம் உந்தன் பாதமம்மா
எங்கும் அணிந்திடும் உள்ளம்
நிறைந்திடும் மங்கள ரூபினியே
எங்கும் நிறைந்த செல்வம் அணிந்திடும்
செல்வ மனோகரியே

(கோல விழி மின்னும்)

**ஜெனனி மகேந்திரன்**
அராலி வட்டுக்கோட்டை

## முருகன் பாடல்

திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா
திருத்தனி மலைமீதில் எதிரொலிக்கும்
திருச்செந்தூரிலே வேலாடும் உன்
திருப்புகழ் பாடியே கடலாகும்
(திருப்பரங்குன்றத்தில்)

பழனியிலே இருக்கும் கந்தபழம் நீ
பார்வையிலே கொடுக்கும் அன்பு பழம்
பழமுதிர் சோலையில் முதிர்த்த பழம்
பக்திப் பசியோடு வருவோர்க்கு ஞானபழம்
(திருப்பரங்குன்றத்தில்)

சிறப்புடனே கந்தத் தோட்டமுண்டு - உன்
சிங்கார மயிலாட தோட்டமுண்டு
உனக்கான மனக்கோயில் கொஞ்சமில்லை
அங்கு உருவாகும் அன்புக்கோர் பஞ்சமில்லை
(திருப்பரங்குன்றத்தில்)

**சிவக்கொழுந்து குடும்பம்**

## முருகன் பாடல்

அன்பென்ற சொல்லுக்கு முருகா உந்தன்
அருளின்றி வாழ்விலே பொருலேது முருகா
ஒளியாக வந்த சக்தி வேல் முருகா - தனியாக
சூரனைப் போரில் வென்ற வேல்முருகா
ஞானபழத்திற்கு மனம் நொந்த முருகா - முன்
கனியான தமிழ் தந்த ஞான வேல் முருகா
(அன்பென்ற சொல்லுக்கு)

ஆண்டியாய் நின்ற வேல் முருகா - உன்னிடம்
சரணடைந்தோர் வாழ்விலே இன்பமே முருகா
பழம் நீ அப்பனே முருகா ஞானப்
பழமுன்னை அல்லாது பழமேது முருகா
(அன்பென்ற சொல்லுக்கு)

அடியார்க்கு ஒளிமயமே முருகா - இருள்
நீக்கி கருணை ஒளி காட்டுவாய் முருகா
வேல் கொண்டு வினை தீர்க்கும் முருகா - தீய
வினையறுக்கும் வித்தகா வெற்றிவேல் முருகா
(அன்பென்ற சொல்லுக்கு)

குன்றிலே குடிகொண்ட முருகா - பக்தர்கள்
குறை நீக்கும் வள்ளல் நியன்றோ மால் முருகா
சக்தி உமை பாலனே முருகா மானிட
சக்திக்கு எட்டாத தத்துவமே முருகா
(அன்பென்ற சொல்லுக்கு)

பிரணவப் பொருள் கண்ட திருமுருகா - பரம்
பொருளுக்கு குருவான நாதனே முருகா
அரஹர சண்முகா வடிவேலனே முருகா தினம்
பாடுவோர் உள்ளத்தில் ஆடுவாய் முருகா
(அன்பென்ற சொல்லுக்கு)

உன் அன்பிற்கு எல்லையேது முருகா - உந்தன்
அருளுக்கு எல்லை தான் இல்லையோ முருகா
கண்கண்ட தெய்வமே முருகா - எங்கள்
கலியுக வரதனே எமைக்காப்பாய் முருகா
(அன்பென்ற சொல்லுக்கு)

**குமாரவேல் சிவகுமார்**
குமாரவேல் சிவமங்களேஸ்வரி
கொழும்பு

## முருகன் பாடல்

சுப்பிரமணியம் சுப்பிரமணியம்
ஷண்முக நாதா சுப்பிரமணியம்
சிவ சிவ சிவசிவ சுப்பிரமணியம்
ஹர ஹர ஹர ஹர சுப்பிரமணியம்
சிவசிவ ஹர ஹர சுப்பிரமணியம்
ஹர ஹர சிவ சிவ சுப்பிரமணியம்
குரு சரவணபவ சுப்பிரமணியம்
குரு சரவணபவ சுப்பிரமணியம்
சிவ சிவ ஹர ஹர சுப்பிரமணியம்
ஹர ஹர சிவசிவ சுப்பிரமணியம்

## முருகன் பாடல்

வேலேந்தி வரவேண்டும் எங்கள் முருகா - என்னை
காத்தருள வேண்டுமய்யா வேல் முருகா
வினை போக்கி அருள் தரும் முருகா - செந்தூரில்
கோயில் கொண்ட முருகா
(வேலேந்தி வரவேண்டும் முருகா)

சேவலில் வந்தவன் வேல் முருகா - என்
தேசத்தை ஆண்டவன் முருகா
ஓம் என்ற நாமகன் வேல் முருகா - எம்மை
ஓம் என்று ஆண்ட வேல் முருகா
(வேலேந்தி வரவேண்டும் முருகா)

தேரிலே சூரனை அழித்த வேல் முருகா - உன்
சேவடி போற்றுகின்றேன் வேல் முருகா - எம்மை
தேடியே வாவன் ஐயா முருகா - உன்
அண்ணனை வென்ற வெற்றி வேல் முருகா
(வேலேந்தி வரவேண்டும் முருகா)

மயிலேறி வரவேண்டும் அழகு முருகா என்
உள்ளத்தில் குடிகொள்ளும் முருகா - உனை
மறவாமல் இருப்பேனா வேல் முருகா
அடைக்கலம் உன் பொறுப்பு முருகா
(வேலேந்தி வரவேண்டும் முருகா)

வேதனை போக்கிடும் வேல் முருகா - எனக்கு
வெற்றிதனை தாவனையா முருகா -
சரணம் சரணம் ஐயா முருகா - உன்
பாதமலர் சரணம் ஐயா முருகா
(வேலேந்தி வரவேண்டும் முருகா)

**சுதாகரன், சத்தியவானி**
சுதாகரன், திலஷ்சன்.
லண்டன்

## அம்மன் பாடல்

தாய் தந்த பிச்சையில் பிறந்தேனம்மா
இன்று நீ தந்த பிச்சையிலே வளர்ந்தேனம்மா
ஏனிந்த வாழ்க்கை என்று அறியேனம்மா
இது இறைவனுக்கு ஒய்வு நேர வியைாட்டம்மா
(தாய் தந்த பிச்சையில்)

பெற்றவள் உடல் சலித்தாள்
பேதை நான் கால் சலித்தேன்
படைத்தவன் கை கலித்து ஓய்ந்தானம்மா
மீண்டும் பாவி ஒரு தாய் வயிற்றில் பிறவேனம்மா
(தாய் தந்த பிச்சையில்)

பத்தும் பறந்திடும் பசி வந்தால் மறந்திடும்
இளைமயில் கொடுமை இந்த வறுமை அம்மா
என்றும் இது தான் நியதி என்றால்
இறைவன் வேண்டுமா

(தாய் தந்த பிச்சையில்)

**ஜெயக்குமார் சிவசோதி**

## சரஸ்வதி பாடல்

மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ்ச் சொல்லெடுத்துப் பாடவந்தோம் - அம்மா

பாடவந்தோம்
அருள்வாய் நீ இசை தருவாய் நீ
இங்கு வருவாய் நீ நலம் தாயே நீ அம்மா
(மாணிக்க வீணை)

நாமணக்கப்பாடி நின்றால் ஞானம் வளர்ப்பாய்
பூமணக்கப் பூசை செய்தால் பூவை நீ மகிழ்வாய்
(மாணிக்க வீணை)

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாய் எங்கள்
உள்ளக் கோவிலிலே உறைந்து நிற்பாய்
கள்ளமில்லாமல் தொழும் அன்பருக்கே என்றும்
அள்ளி அறிவைத்தரும் அன்னையும் நீ
வாணி சரஸ்வதி மாதவி பாரதி பாகதீஸ்வரி மாலினி
காணும் பொருளில் தோன்றும் கலைமணி
வேண்டும் வரம்தரும் வேணி நான்முகன் நாயகி
மோகினி ரூபிணி

நான்மறை போற்றும் தேவி நீ
வானவர்க்கமுதே தேவனருள் சிந்தும்
ஞான மனோகரி கல்யாணி
அருள் வாய் நீ இசைதரவா நீ
இங்கு வருவாய் நீ நலம் வரவே நீ அம்மா
(மாணிக்க வீணை)

**விநாயகனே**

நானிலம் போற்றும் நாயகனே
நல்லவர் உள்ளத்தின் ஒளி விளக்கே
தம்பிக்குத் துணைநின்ற கணபதியே
தாள் பணியும் எம்மைக் காத்திடய்யா

சுற்றி வந்திடும் துன்பங்களைத்
துரத்தி ஓட்டிட வந்திடுவாய்
சுற்றமும் சூழலும் உன்னருளால்
ஏற்றம் அடைந்திட வேண்டுமையா

ஆதி சிவனின் மூத்தோனே
அன்னை சக்தியின் திருமகனே
பாதி வழியில் தவிக்கின்றோம்
பார்த்து நல்வழி காட்டிடய்யா

கருவினிலே வள்ர்ந்திடும் குஞ்சுகளும்
உருவம் சிதைத்து அழிகின்றன
சீறி வந்திடும் கொலைப் பகையை
உன் சக்தியினாலே சிதைத்திடய்யா

வாடித் துடித்திடும் மக்களுக்கு
ஓடி வந்து அருளிடுவாய்
நாடி வருகின்றோம் உன்னடியை
நாளும் பொழுதும் துணையிரய்யா

கொழும்பு மாநகரில் குடி கொண்டாய்
கொடுமைகள் தன்னையே துடைத் தெறிவாய்
நம்பிக்கையுடனே இருக்கின்றோம்
விநாயகனே எம்மைக் காத்திடய்யா

**மகேந்திரன் குடும்பம்**
அராலி வட்டுக்கோட்டை

## திருநீற்றும் பதிகம்

1. மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திரு ஆலவாயான திரு நீறே

2. வேதத்திலுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போந்த தருவது நீறு புன்மை தவிப்பது நீறு
ஓதத் தருவது நீறு உண்மையிலுள்ளது நீறு
சீதப் புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான திரு நீறே

3. முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திரு நீறே

4. காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மரணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திரு ஆலவாயான் திரு நீறே

5. பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருத்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான் திரு நீறே

6. அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசம் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயன் திரு நீறே

7. எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே

8. இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அரா வணங்குத் திருமேனி ஆலவாயான் திருநீறே

9. மாலொடயனறியாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண் பொடி நீறு
ஏல உடம்பிடா தீர்க்கும் இன்பத்தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆலவாயன் திரு நீறே

10. குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூடக்
கண்டிகை பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்டபொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர் பணிந் தேத்தும் திரு ஆலவாயான் திரு நீறே

11. ஆற்றல் அடல் விடை யேறும் ஆலவாயான் திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

இந்தத் திருப்பதிகத்தை தினந்தோறும் திரு நீற்றைத் தரிக்கும் போது அன்புடன் ஓதுதல் வேண்டும் அதாவது ஞானகணேஸ்வரித்தாயின் திருநீற்றை தரிக்கும் போது இதனை ஒதி ஓதி உருவேற்றிக் கொண்டு நோய்வாய்ப்பட்டவர்க்கு தாயின் திருநீற்றைப் பூசினால் நோய் நீங்கி நலம் உண்டாகும். இத் தாயின் திரு நீறு உலகெங்கும் உள்ள மக்களுக்கு வரப் பிரசாதமாகும்.

ஞான கணேஸ்வரித் தாயின் திருநீற்றுகிமை

"பாடக்கினிய வாக்களிக்கும் பாலும் சோறும் பரிந்தளிக்கும்
கூடற்கனிய அடியவர்தம் கூட்டமளிக்கும் குணமளிக்கும்
ஆடற்கினிய நெஞ்சே நீ அஞ்சேல் என்மேல் ஆணை கண்டாய்
தேடற்கினிய திருவளிக்கும் சிவாயநம என்றிடு நீறே"

## திரு நீற்றுப் பதிகம்

1. கொண்ட கொண்டிட்ட வெகு
சொரூபங்களுக்கழகு கொடுக்கச் சமைந்த நீறு
கொடிய வெண்ணாயிரஞ் சமணரைக் கழுவினிற்
கொலை செய்து கண்ட நீறு
துண்ட கண்டப்படக் கொடூர வெஞ்சூரனுடல்
துணிக்க வேல் தொட்டநீறு
சொல்லரிய பூதப் பிசாசு பில்லி
சூனியஞ் சுடரிட்டெரித்த நீறு
செண்டு போற் கயிலை மலை யெடுத்தவன்
கடன் முதுகு செவ்வையாய் நிமிர்ந்த நீறு

சிவபக்தியில்லாத முழு மூடர்
நெஞ்சந்திடுக்கிடத் தொடுத்தநீறு ஞான
கணேஸ்வரித்தாயின் திருநீறு
அண்ட நவகண்டமுதல் வணக்கித்
துதித்திட ஆண்மையாய் வந்த நீறு
அடியவர்க்கருள் கிருபை மொழி
பழனியங்கரி யறுமுகவர் திரு வெண்ணீறே
சம்பந்தராகவே தென்னவன்
கூடலிற் சமணரையழித்த நீறு
சகல குருபரனாக அரசனுக்கு
வுபதேசந் தானாயுரைத்த நீறு
நம்பின அடியவர்கள் ஈடேற
வினையோட நாதனாய் வந்த நீறு ஞான
கணேஸ்வரித்தாயின் திருநீறு
நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகள்
முனி சித்தர்கள் நம்பியே பூசு நீறு
கம்பமத யானைமா முகவனுக்கிளையவன்
கருதியே தந்த நீறு
காலனிட தூதனை நாடாமலெந்நாளும்
காக்கவே வந்த நீறு
அம்பிகை திரிசூலி சுந்தரி சவுந்தரி
அபிராமி வல்லி தந்த
அடியாவர்க்கருளும் கிருபைபொழி
பழனியங்கிரி யறு முகவர் திருவெண்ணீறே

3. அரவங்கள் பூதங்கள் மிருகங்கள்
பேய்களை அடக்கவேயிட்ட நீறு
அஷ்டபாக்கிய லட்சுமியஷ்ட
முடலெந்நாளு மகலாமலிட்ட நீறு
இரவு பகல் மறவாமல் முருகர்
திருநாமமே யிறைஞ்சித் தரித்த நீறு
எதிராளி நெஞ்சங் கலங்கிட
பயந்தோட யேற்க வேயிட்ட நீறு ஞான
கணேஸ்வரித்தாயின் திரு நீறு
பரவுபல பிணிகளும் உறவு கெடு கோள்களும்
பணிந்தோட விட்ட நீறு
பஞ்ச பாதகமுடன் மிஞ்சிடும் வல்வினை
பணிந்திட அணிந்த நீறு
அரசனுடன் மந்திரி யாண்புவிவீரரும்
மதி வசியமான நீறு
அடியாவர்க்கருள் கிருபைமொழி
பழனியங்கிரி யறுமுகவர் திருவெண்ணீறை

4. இருப்பான தலமெலா மென்றுந்
துதிப்பதற் கீடேற்றஞ் செய்யு நீறு
எங்கெங் கிருந்தாலும் மேத்திப்
பணிந்திட வெதிராக நிற்கு நீறு
திருப்பரங்குன்றமுஞ் செந்தில்
கதிர்காமமுந் திருச் சோலைக்கு கந்தநீறு

திருத்தணிகை சுவாமி மலை
திருவேரகம் புகழ் செவ்வேலர் தந்த நீறு
பொறுப்புகள் முடிதோறும் பதக மல முத்திரை

புகழ் பெருக பூசை செய்யைவராற்றிருவாவினன்
குடி போதிக்க வந்தநீறு
அருட் பாதம் நத்தியே நினைப்பவர்கள்
நெஞ்சினில் அகலாதிருந்த நீறு ஞான கணேஸ்வரித்
தாயின் திரு நீறு
அடியவர்க்கருள் கிருபை பொழி
பழனியங்கிரி யறுமுகவர் திரு வெண்ணீறே

5. நூலைப்பகுத்த விடை மாதர்க்கு
வேலாக நுதலிற்தரித்த நீறு
நூறு நூறாயிர மீமிசை வந்தாலுமொரு
நொடியிற் றொலைக்கு நீறு
வேலைக்கடிந்து வெகு சூரர்கள் மடியவே
வெற்றிவேல் தொட்ட நீறு
வேதனைச் சிறையிட்டு பிரணவத்துட பொருள்
விமலற் குரைத்த நீறு
வாலைப் பருவமாய் வயது நூறாகவே
வசியகரமான நீறு
மாறாத செல்வமும் பேறான வாழ்வுடன்
வரிசை தரவந்த நீறு ஞான கணேஸ்வரித் தாயின் திரு நீறு
ஆலவாய்ச் சொக்கருடன் ஆனந்தத்
தாண்டவம் ஆடிச் செழித்த நீறு
அடியவர்கருள் கிருபை பொழி
பழனியங்கிரி யறுமுகவா திருவெண்ணீறே

6. ஓராறு சென்னியு மீராறு
புயமு மென்னுள்ளம் பதித்த நீறு ஞான கணேஸ்வரித்
தாயின் திருநீறு
ஓது தமிழ் மதுரையிலுமை பெண்



பேசவே உபதேசமான நீறு
காரானை முகவனுக் கிளையவன்
விராலிமலைக் காங்கேயன் தந்த நீறு
கயிலை மலை யொரு நொடியில்
அரனைவலயமாகவே காணவே வந்த நீறு
பேரான வசுரருங் குன்றமும்
வேலாற் பொடிபடத் துணிந்த நீறு.

பொற்சந்தி மலையிலுறை வள்ளியுட நாயகன்
பொன்னடி வணங்கு நீறு
ஆறாடு செஞ்சடைக் கயிலை நாயகலுமைக் கழகு பெற
வந்த நீறு
அடியவர்க்கருள் கிருபைமொழி
பழனியங்கிரி யறுமுகவர் திருவெண்ணீறே

7. எத்தேச காலமும் முத்தைய
ரென்றுமிவ் வேழைக் கிரங்கு நீறு
எழிலான கிருத்திகை தவறாம லனுஷ்டிக்க
வின்பங்கள் தந்த நீறு ஞான கணேஸ்வரித்தாயின் திரு நீறு
சிற்றிடை வள்ளியுடன் தினைப்புனங் காத்திடச்
சிவசித்தாய் நின்றநீறு
சிற்றூரு வேடர்கள் சிவ பக்தராகவே
திருவுருக் கொண்ட நீறு
முத் தமிழ்க்காகவே அருணகிரிநாதருக்கு
மோவுங் கொடுத்த நீறு
முப்பத்து முக்கோடி தேவாதி தேவரும்
முருகரென வந்த நீறு
அத்தனருள் கந்தனார் நித்தம்

விளையாடவே யகலாமலிட்ட நீறு
அடியவர்க்கருள் கிருபை பொழி
பழனியங்கிரி யறுமுகவர் திருவெண்ணீறே

8. வேதாள பூதப் பிசாசு பில்லி
சூனிய மிரட்டித் துரத்து நீறு
வெண்டையந் தண்டையொடு கிண்கிணி
சிலம்பசைய வீர வேல் தொட்ட நீறு
சூதாள களபமுலை வள்ளியிட நாயகன்
சுப்பிரமணியர் தந்த நீறு
தும்புரு நாரதர் கிம்புருடர் போற்றித்
துலங்கவே வந்த நீறு
ஓம் முருகாவென்று உள்ளமது
குளிரவே உற்ற துணையான நீறு
ஓம் நமசிவாயகுரு ஞானாதி தேசிகன்
ஒளியாகி வந்த நீறு
ஆதாரமாகவே நெஞ்சனி லெப் பொழுது
மறவாது நின்ற நீறு ஞான கணேஸ்வரித் தாயின்
திருநீறு
அடியவர்க்கருள் கிருபை பொழி
பழனியங்கிரி யறுமுகவர் திருவெண்ணீறே

9. துஷ்டப் பிசாசு பிணி கிட்ட
வெட்டாமலே சுடரிட்டெரித்த நீறு
சுற்றவே நிற்கின்ற அஷ்டதிசை பாலரும்
சொல்லு முன் வணங்கு நீறு
வட்டமாய் படர் தேகம் பதினெட்டு
குஷ்டமும் வாராமற் பூசு நீறு ஞான கணேஸ்வரித்தாயின்
திரு நீறு

வாளரவம் வண்டு கடி சிலந்தி தேன்
விவுமெலா வாங்கவு மணிந்த நீறு
கொட்டமிடு சூரரை வெட்டிப் பலியிட்டு
செயங் கொள்ளவே வந்த நீறு
கூறு மொழி நக்கீரர் மேன்மை பெற
வேல் வாங்கி குன்றைப் பிளந்த நீறு
அஷ்ட திசை பதினாறு முக்கோணசட்கோண
மறுபத்து நாலுகலையும்
அடிவர்க்கருள் கிருபை பொழி
பழனியங்கிரி யறுமுகவர் திருவெண்ணீறே.

10. மறு மலர் கமலத் துதித்தவன்
கிளைவழி வாழ்விக்க வந்தநீறு
மன்னுயிர்மாமுனி அகஸ்தியர்
போகருடன் வழி கொள்ளவந்த நீறு
சரணமலரன்பனாங் குலாலகுலத்
திருக்கை தண்டமிட்டுதவ நீறு
சண்முக நதி மூழ்கி கிரிவலம் வந்தோர்க்கு
சகல பிணி தீர்த்த நீறு
வறுமைபடு மெளியார்க்குங் கொலை செய்த
பாவற்கும் வருவித மொத்த நீறு ஞான கணேஸ்வரித்
தாயின் திரு நீறு
வாழ்வு கார்த்திகை சோம சுக்கிர வாரஞ்சஷ்டி
வந்திப் போர்க் கருளு நீறு
அருமறைகள் பரவுகுரு சிவசமயந்
தழைக்கவே யவதரித்தருள நீறு
அடியவர்க்கருள் கிருபை பொழி
பழனியங்கிரி யறுமுகவர் திருவெண்ணீறே

11. பத்தான கவிதையும் மனதிற் றுதிப் போர்க்குப்
பாக்கியந் தந்த நீறு ஞான கணேஸ்வரித் தாயின் திரு
நீறு
பரிசாக யெந்நாளும் சரவணபவாவென்ன
பரிசு பெற வைக்கும் நீறு
கஸ்தூரி குங்குமம் கமழ
வள்ளி நாயகன் காங்கேயன் தந்த நீறு
கார்த்திகை நாள் தோன்றி வெற்றி வேலாயுதன்
கடம்பனார் தந்த நீறு
முத்து நவரத்தினத் தண்டயணி பரதநன்
முடி மேற்தரித்த நீறு.
முழு நீல் மயிலேறி வந்து முன்
நின்றுமே முன்கையிற் தந்த நீறு
அத்தனாற் பங்கினிற் சத்துரு சங்காரியாய்
அபிராமி வல்லி தந்த
அடியவர்க்கருள் கிருபைபொழி
பழனியங்கிரி யறுமுகவர் திருவெண்ணீறே

12. வட்டச் சடாட்சரச் சரவணபவாவென்று
மதியறறுதிக்கும் நீறு
வாதாடி வந்தெதிர்த்திட்ட பூதவர்களை
மார்பைப் பிளந்த நீறு
இஷ்டமுடன் சரியையொடு கிரியையோக
ஞான மேற்கவே தந்த நீறு ஞான கணேஸ்வரித்தாயின்
திரு நீறு
இன்பமாகவே கயிலை மலையேறி
மோவுத்திலிருக்கத் தகுந்த நீறு
எட்டுத் திசையதிர மயிலேறி

உலகை வலமிமைக்கு முன் வந்த நீறு
இமையவர் முனிவர்கள் தேவேந்திரனாதியர்
இட ரழித்திட்ட நீறு
அஷ்ட திசை பெற்ற தீவேழு
மீரேழுலகை அரசாளவந்த நீறு
அடியவர்க்கருள் கிருபை மொழி
பழனியங்கிரி யறுமுகவர் திருவெண்ணீறே

**மகேந்திரன் குடும்பம்**
அராலிவட்டுக் கோட்டை

ஞான வடிவானவளே ஞான கணேஸ்வரி
கண்டகண்ட தெய்வம்மா நாகபூசனி
கலியுகத்தில் தெய்வம்மா ஞானகணேஸ்வரி
நாகத்தின் வடிவம் அம்மா நாகபூசனி
நாக வடிவானவளே ஞானகணேஸ்வரி
ஐந்து தலை நாகத்துடன் நாகபூசனி
அசைந்து விளையாடிடுவாய் ஞானகணேஸ்வரி
அம்மா உன்னை நாடிவரும் அடியவற்கே நாகபூசனி
நல்வரம் அருள்வாயம்மா ஞானகணேஸ்வரி
வேப்பிலையின் நாயகியே நாகபூசனி அம்மா,
எங்கள் வினைகள் எல்லாம் தீர்ப்பவளே ஞானகணேஸ்வரி
குடும்பத்தின் வடிவம் அம்மா நாகபூசனி
குங்கும நாயகியே ஞானகணேஸ்வரி
திருநீற்றின் வடிவம்மா நாகபூசனி
எங்கள் நோய்கள் எல்லாம் தீர்ப்பவளே ஞானகணேஸ்வரி
அம்மா நாகம் குடை பிடிக்க நாக பூசனி தாயே
அடியவரைக் காப்பாய் அம்மா ஞானகணேஸ்வரி
உந்தன் மகிமை அறிந்தும் அம்மா நாகபூசனி
இந்த மண்டலத்தில் பாடுகின்றோம் ஞானகணேஸ்வரி
தாயே உந்தன் சேதி அறிந்துமம்மா நாகபூசனி
இந்த தேசத்தில் பாடுகின்றோம் ஞானகணேஸ்வரி
பரிகாசம் செய்பவரை நாகபூசனி தாயே
பழிவாங்கும் தெய்வமம்மா ஞானகணேஸ்வரி
எம் குரலில் குடியிருந்து நாகபூசனி தாயே
குரலோசை தந்திடம்மா ஞானகணேஸ்வரி
சரணம் சரணம் அம்மா நாகபூசனி தாயே
உந்தன் பாதம் சரணம் அம்மா ஞானகணேஸ்வரி

**மகேந்திரன் குடும்பம்**

# அபிராமி அந்தாதி

கணபதி காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே உலகேழும்பெற்ற
சீரபி ராமிஅந் தாதிஎப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

நூல்

உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழுத்துணையே. 1

துணையும், தொழுந்தெய்வ மும்,பெற்ற தாயும், சுருதிகளின்
பணையும், கொழுந்தும், பதிகொண்ட வேரும், பனிமலர்ப்பூங்
கணையும், கருப்புச் சிலையுமென் பாசாங் குசமும்,கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே. 2

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக் கே,திரு வே!வெருவிப்
பிறிந்தேன், நின்அன்பர் பெருமையெண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குஉற வாய மனிதரையே! 3

மனிதரும், தேவரும், மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மே,கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயுமென் புந்திஎந் நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை, செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சுஅமு தாக்கிய அம்பிகை! அம்புயம்மேல்
திருந்திய சுந்தரி, அந்தரி பாதமென் சென்னியதே. 5

சென்னியது உன்பொற் றிருவடித் தாமரை; சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம்; சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னியது, என்றும்உன் தன்பர மாகம பத்ததியே! 6

ததியுறு மத்தின் சுழலும்என் ஆவி, தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்,
மதியுறு வேணி மகிழ்நனும், மாலும், வணங்கிஎன்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே! 7

சுந்தரி எந்தை துணைவி, என் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி, சிந்துர வண்ணத்தி னாள்,மகி டன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாள்என் கருத்தனவே. 8

கருத்தன எந்தைதன், கண்ணன, வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு நல்கின, பேர்அருள்கூர்
திருத்தன பாரமும், ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்
முருத்தன மூரலும், நீயும்அம் மே.வந்துஎன் முன்நிற்கவே. 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை;
என்றும் வணங்குவது உன்மலர்த் தாள்;எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளே!அரு ளே!உமை யே!இமயத்து
அன்றும் பிறந்தவ ளே!அழி யாமுத்தி ஆனந்தமே! 10

ஆனந்த மாய்என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான்அந்த மான வடிவுடை யாள்,மறை நான்கினுக்கும்
தான்அந்த மான சரணார விந்தம் தவளநிறக்
கானம்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே. 11

கண்ணியது உன்புகழ்; கற்பது உன் நாமம்; கசிந்துபக்தி
பண்ணியது உன்இரு பாதாம் புயத்தில் பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து; நான்முன்செய்த
புண்ணியம் ஏது?என்அம் மே!புவி ஏழையும் பூத்தவளே! 12

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும், பூத்தவண்ணம்
காத்தவ ளே!பின் கரந்தவ ளே!கறைக் கண்டனுக்கு
மூத்தவ ளே!என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவ ளே!உன்னை அன்றிமற்று ஓர்தெய்வம் வந்திப்பதே? 13

வந்திப் பவர்உன்னை, வானவர் தானவர் ஆனவர்கள்;
சிந்திப் பவர்,நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்,அழி யாப்பர மானந்தர்; பாரில்உன்னைச்
சந்திப் பவர்க்குஎளி தாம்எம் பிராட்டி!நின் தண்ணளியே 14

தண்ணளிக்கு என்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்,
மண்அளிக் கும்செல்வ மோபெறு வார்?மதி வானவர்தம்
விண்அளிக் கும்செல்வ மும்,அழி யாமுத்தி வீடும்அன்றோ?
பண்அளிக் கும்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே! 15

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்துஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்குஇட மே!எண்ணில் ஒன்றும்இல்லா
வெளியே! வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தஅம்மே!
அளியேன் அறிவுஅள விற்குஅள வானது அதிசயமே! 16

அதிசய மான வடிவுடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி! துணைஇரதி
பதிசய மானது அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகஅன் றோ,வாம பாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து,
வெவ்விய காலன்என் மேல்வரும் போது, வெளிநிற்கவே! 18

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்து, என் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டது இல்லை, கருத்தினுள்ளே
தெளிகின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ!
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே! 19

உறைகின்ற நின்திருக் கோயில்,நின் கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோ?அமுதம்
நிறைகின்ற வெண்திங் களோ?கஞ்ச மோ?என்தன் நெஞ்சகமோ?
மறைகின்ற வாரிதி யோ?பூர ணாசல மங்கலையே! 20

மங்கலை, செங்கல சம்முலை யாள்,மலை யாள்,வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில், தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள்,உடையாள்,
பிங்கலை, நீலி,செய் யாள்,வெளி யாள்பசும் பெண்கொடியே! 21

கொடியே! இளவஞ்சிக் கொம்பே! எனக்குவம் பேபழுத்த
படியே! மறையின் பரிமள மே!பனி மால்இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே!
அடியேன் இறந்துஇங்கு இனிப்பிற வாமல்வந்து ஆண்டுகொள்ளே! 22

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல் லாது, அன்பர் கூட்டம்தன்னை
விள்ளேன்; பரசம யம்விரும் பேன்;வியன் மூவுலகுக்கு
உள்ளே! அனைத்தினுக் கும்புறம் பே!உள்ளத் தேவிளைந்த
கள்ளே! களிக்கும் களியே! அளியஎன் கண்மணியே! 23

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்குஅழ கே!அணு காதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை, நின்பத்ம பாதம் பணிந்தபின்னே! 24

பின்னே திரிந்துஉன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்;முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே? இனிஉன்னை யான்மற வாமல்நின்று ஏத்துவனே! 25

ஏத்தும் அடியவர் ஈரேழ் உலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கே!மணம் நாறும்நின் தாள்இணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே! 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை; உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை; பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை; நெஞ்சத்து அழுக்கை எல்லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை; சுந்தரி! நின்அருள் ஏதென்று சொல்லுவதே! 27

சொல்லும் பொருளும் என,நட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யே!நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே. 28

சித்தியும், சித்தி தரும்தெய்வம் ஆகித் திகழும்பரா
சக்தியும், சக்தி தழைக்கும் சிவமும், தவம்முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும், வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தைஅன்றே. 29

அன்றே தடுத்துஎன்னை ஆண்டுகொண் டாய்கொண்டது அல்லஎன்கை
நன்றே? உனக்கினி நான்என் செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும், கரையேற்று கைநின் திருவுளமே
ஒன்றே! பலஉரு வே!அரு வே!என் உமையவளே! 30

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்கு,
எனையும் தமக்குஅன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமயங்களும் இல்லை; ஈன்றெடுப் பாள்ஒரு தாயும்இல்லை;
அமையும், அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே! 31

ஆசைக் கடலில் அகப்பட்டு, அருள் அற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் படஇருந் தேனை,நின் பாதம்என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லுவேன்! ஈசர் பாகத்து நேரிழையே! 32

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து, "அஞ்சல்"என் பாய்,அத்தர் சித்தம்எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே!
உழைக்கும் பொழுதுஉன்னை யே"அன்னை யே"என்பன், ஓடிவந்தே. 33

வந்தே சரணம் புகும்அடி யாருக்கு, வானுலகம்
தந்தே, பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்,
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும், பாகமும்பொற்
செந்தேன் மலரும், அலர்கதிர் ஞாயிறும், திங்களுமே. 34

திங்கட் பகவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க,
எங்கட் கொருதவம் எய்தியவா?எண் இறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்து மோ?தரங் கக்கடலுள்
வெங்கட் பணிஅணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே! 35

பொருளே! பொருள்முடிக் கும்போக மே!அரும் போகம்செய்யும்
மருளே! மருளில் வரும்தெரு ளே!என் மனத்துவஞ்சத்
திருள்ஏதும் இன்றி ஒளிவெளி ஆகி இருக்கும்உன்றன்
அருள்ஏது அறிகின்றி லேன்.அம்பு யாதனத்து அம்பிகையே! 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலம்அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே! 37

பவளக் கொடியில் பழுத்தசெவ் வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது, துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே 38

ஆளுகைக்கு உன்தன் அடித்தா மரைகள்உண்டு; அந்தகன்பால்
மீளுகைக்கு உன்தன் விழியின் கடைஉண்டு; மேல்இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறை யேஅன்று; முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே! 39

வாணுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்துஇறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணம்அன் றோமுன்செய் புண்ணியமே! 40

புண்ணியம் செய்தன மே!மன மே!புதுப் பூங்குவளைக்
கண்ணியும், செய்ய கணவரும் கூடி,நம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து, தம்அடி யார்கள் நடுஇருக்கப்
பண்ணி,நம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி இளகி, முத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி! நல்அரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே 42

பரிபுரச் சீறடிப் பாசாங் குசை,பஞ்ச பாணி,இன்சொல்
திரிபுர சுந்தரி, சிந்துர மேனியள், தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை,
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்து இருந்தவளே! 43

தவளே இவள் எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்;
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள், ஆகையினால்,
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்;
துவளேன், இனிஒரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே. 44

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது, துணிந்துஇச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோ?அப் பரிசுஅடியேன்
கண்டுசெய் தால்,அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ?
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கைஅன்றே. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும், தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதுஅன் றே;புது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை வாழ்த்துவனே. 46

வாழும் படிஒன்று கண்டுகொண் டேன்மனத் தேஒருவர்
வீழும் படிஅன்று; விள்ளும் படிஅன்று; வேலைநிலம்
ஏழும், பருவரை எட்டும்எட் டாமல், இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில்ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்துஇமைப் போதுஇருப் பார்பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே? 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி,வெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப் போதுவளைக் கைஅமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து, "அஞ்சல்"என்பாய்,
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே! 49

நாயகி, நான்முகி, நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி, சாமளை, சாதிநச்சு
வாயகி மாலினி, வாராகி, சூலினி, மாதங்கிஎன்று
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே. 50

அரணம் பொருள்என்று அருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன்று அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே,
"சரணம் சரணம்" எனநின்ற நாயகி தன் அடியார்,
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே. 51

வையம், துரகம், மதகரி, மாமகு டம்,சிவிகை,
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடை யார்க்குஉள வாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்,முத் தாரமும், பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்,கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனிஇருப் பார்க்குஇது போலும் தவம்இல்லையே

இல்லாமை சொல்லி, ஒருவர்தம் பால்சென்று, இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்,நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னாள், அகமகிழ் ஆனந்த வல்லி, அருமறைக்கு
முன்னாய், நடுஎங்கு மாய்,முடி வாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும், வேண்டுவது ஒன்றில்லையே

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து,இவ் வுலகெங்குமாய்ப்
நின்றாள், அனைத்தையும் நீங்கிநிற் பாள்என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வா!இப் பொருள்அறிவார்
அன்றுஆலி லையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்டு, அண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி, ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்; இது வோஉன்றன் மெய்யருளே? :

அருணாம் புயத்தும்,என் சித்தாம் புயத்தும், அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்,தகை சேர்நயனக்
கருணாம் புயமும், வதனாம் புயமும், கராம்புயமும்,
சரணாம் புயமும்அல் லால்கண்டி லேன்,ஒரு தஞ்சமுமே

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுஉன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்கு அலராகி நின்றாய் அறி யார்எனினும்,
பஞ்சஞ்சும் மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே

பாலினும் சொல்இனி யாய்!பனி மாமலர்ப் பாதம்வைக்க,
மாலினும், தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும், கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம் ஒரு
நாலினும், சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே?

நாயே னையும்இங்கு ஒருபொரு ளாக நயந்துவந்து,
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்,நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்!
தாயே, மலைமக ளே,செங்கண் மால்திருத் தங்கச்சியே!

தங்கச் சிலைகொண்டு, தானவர் முப்புரம் சாய்த்து,மத
வெங்கண் கரிஉரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி, கோகனகச்
செங்கைக் கரும்பும், மலரும்எப் போதும்என் சிந்தையதே 62

தேறும் படிசில ஏதுவும் காட்டி,முன் செல்கதிக்குக்
கூறும் பொருள், குன்றில் கொட்டும் தறி,குறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்,
வேறும் சமயம்உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பால்சென்று, மிக்கஅன்பு
பூணேன் உனக்குஅன்பு பூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன், ஒருபொழு தும்திரு மேனிப்ர காசம்அன்றிக்
காணேன் இருநில மும்,திசை நான்கும், ககனமுமே 64

ககனமும் வானும் புவனமும் காண,விற் காமன் அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனும்முந் நான்குஇரு மூன்றுஎனத் தோன்றிய மூதறிவின்
மகனும்உண் டாயதன் றோ?வல்லி நீசெய்த வல்லபமே 65

வல்லபம் ஒன்றறி யேன்,சிறி யேன்நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றுஒன்று இலேன்,பசும் பொன்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்,வினை யேன்தொடுத்த
சொல்அவ மாயினும், நின்திரு நாமங்கள் தோத்திரமே 66

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மை,குலம்,
கோத்திரம், கல்வி, குணம்குன்றி, நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குஉழ லாநிற்பர் பாரெங்குமே 67

பாரும், புனலும், கனலும், வெங் காலும், படர்விசும்பும்;
காலும், படர்விசும்பும்; ஊறும் முருகு சுவைஒளி ஊறுஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவம்உடை யார்படை யாத தனம்இல்லையே. 68

தனம்தரும்; கல்வி தரும்;ஒரு நாளும் தளர்வுஅறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும்;நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும்; நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே,
கனம்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே 69

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்,கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும், கையும், பயோதரமும்,
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி, மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே 70

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி, அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்,பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமளை யாமளைக் கொம்பிருக்க,
இழவுற்று நின்றநெஞ் சே!இரங் கேல்!உனக்கு என்குறையே? 71

என்குறை தீரநின்று ஏத்துகின் றேன்;இனி யான்பிறக்கின்,
நின்குறையே அன்றி யார்குறை காண்?இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்!
தன்குறை தீர,எம் கோன்சடை மேல்வைத்த தாமரையே 72

தாமம் கடம்பு; படைபஞ்ச பாணம்; தனுக்கரும்பு;
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது;எமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு,ஒளி செம்மை;அம்மை
நாமம் திரிபுரை; ஒன்றோடு இரண்டு நயனங்களே 73

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்,
அயனும் பரவும் அபிராம வல்லி அடிஇணையைப்
பயன்என்று கொண்டவர், பாவையர் ஆடவும் பாடவும்,பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே 74

தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயர்இன்றி
மங்குவர், மண்ணில் வழுவாய் பிறவியை மால்வரையும்,
பொங்குவர் ஆழியும், ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே 75

குறித்தேன் மனத்தில்,நின் கோலம்எல் லாம்;நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி; வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரான்ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே! 76

பயிரவி! பஞ்சமி! பாசாங் குசை!பஞ்ச பாணி!வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி! காளி! ஒளிரும்கலா
வயிரவி! மண்டலி! மாலினி! சூலி! வராகிஎன்றே
செயிர்அவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே 77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்,
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே 78

விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு; வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு;அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்று,வெம் பாவங்க ளே,செய்து, பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடுஎன்ன கூட்டுஇனியே? 79

கூட்டியவா என்னைத் தன்அடி யாரில், கொடியவினை
ஓட்டியவா, என்கண் ஓடியவா, தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா, கண்டகண்ணும் மனமும் களிக்கின்றவா,
ஆட்டியவா நடம் ஆடகத் தாமரை ஆரணங்கே 80

அணங்கே! அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை; வாழ்த்துகிலேன் நெஞ்சில்; வஞ்சகரோடு
இணங்கேன் எனதுஉனது என்றுஇருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன்; அறிவொன்றி லேன்;என்கண் நீவைத்த பேரளியே! 81

அளிஆர் கமலத்தில் ஆரணங் கே!அகி லாண்டமும்நின்
ஒளிஆக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களிஆகி, அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்,எங்ஙனே மறப் பேன்நின் விரகினையே? 82

விரவும் புதுமலர் இட்டு,நின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்,இமை யோர்எவரும்
பரவும் பதமும், அயிரா வதமும், பகீரதியும்
உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே 83

உடையாளை, ஒல்குசெம் பட்டுடை யாளை, ஒளிர்மதிச்செஞ்
சடையாளை, வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை, எங்கள்பெம் மான்இடை யாளை,இங் கென்னையினிப்
படையாளை, உங்களைப் படையா. யாவண்ணம் பார்த்திருமே 84

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும், பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும்,என் அல்லலெல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும், சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்,முலை மேல்முத்து மாலையுமே 85

மாலயன் தேட, மறைதேட, வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு, கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும் போது, வெளிநில்கண்டாய்!
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே! 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தி, என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்,விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை, அண்டமெல்லாம்
பழிக்கும் படிஒரு பாகம்கொண் டாளும் பராபரையே! 87

பரம்என்று உனைஅடைந் தேன்தமி யேனும்,உன் பத்தருக்குள்
தரம்அன்று இவன்என்று தள்ளத் தகாது; தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே! 88



சிறக்கும் கமலத் திருவே! நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும், துரியமற்ற
உறக்கம் தரவந்து, உடம்போடு உயிர்உறவு அற்றுஅறிவு
மறக்கும் பொழுது,என்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே 89

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்து
இருந்தாள், பழைய இருப்பிட மாக; இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லை;விண் மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியலே! 90

மெல்லிய நுண்இடை மின்அனை யாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழும்அவர்க்கு
பல்லியம் ஆர்த்துஎழ, வெண்பகடு ஊரும் பதம்தருமே 91

பதத்தே உருகி,நின் பாதத்தி லேமனம் பற்றி,உன்றன்
இதத்தே ஒழுக, அடிமைகொண் டாய்;இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்;அவர் போன வழியும்செல்லேன்!
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே! 92

நகையே இஃதுஇந்த ஞாலம்எல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே, முகிழ்முலை மானே முதுகண் முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே; மலைமகள் என்பதும்நாம்;
மிகையே; இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே 93

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி, மெய்புளகம்
அரும்பித், ததும்பிய ஆனந்த மாகி, அறிவிழந்து,
சுரும்பிற் களித்து, மொழிதடு மாறி,முன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்,அபி ராமி சமயம்நன்றே! 94

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம்,எனக்கு உள்ளஎல்லாம்
அன்றே உனதுஎன்று அளித்துவிட் டேன்;அழி யாதகுணக்
குன்றே! அருட்கட லே!இம வான்பெற்ற கோமளமே! 95

கோமள வல்லியை, அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை, ஏத மிலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயிலைத் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்,எழு பாருக்கும் ஆதிபரே 96

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்,
போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே 97

தைவந்து நின் அடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததுஎங்கே?
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல்அறி யாமடப் பூங்குயிலே! 98

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை; வந்துஉதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில், கமலத்தின் மீதுஅன்னமாம்,
கயிலா யருக்குஅன்று இமவான் அளித்த கனங்குழையே 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி,
கழையைப் பொருத திருநெடுந் தோளும், கருப்புவில்லும்,
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும், வெண்ணகையும்,
உழையைப் பொருகண்ணும், நெஞ்சில்எப் போதும் உதிக்கின்றவே! 100

நூற்பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத் தாளை, புவிஅடங்கக்
காத்தாளை, அங்குச பாசாங் குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணி யைத்தொழு வார்க்குஒரு தீங்கில்லையே.



## வரலட்சுமி விரதக்கதை

நைமிசாரண்யத்திரத்தில் தவம் செய்துக் கொண்டிருக்கும் கௌனகாதி மகாரிஷிகளை பார்த்து சூதமகாமுனிவர் சொல்லுகிறார். "ஓமுனிசிரேஷ்டர்களே! பெண்களுக்கு சர்வசௌபாக்கியத்தை கொடுக்கும்படியான உத்தம விரதம் ஒன்றுண்டு."

அதைப் பரமேஸ்வரன் பார்வதிக்கு சொன்னார் அந்த சிரேஷ்டமான விரதத்தை உங்களுக்கு சொல்லுகிறேன், கேளுங்கள்.

"கைலாச பர்வதத்தில் வைடூரியமயமான மணிக்கணங்களால் இழைக்கப்பட்ட சிங்காசனத்தில் வீற்றிருந்த பரமேஸ்வரனைப் பார்வதி தேவி நமஸ்கரித்து "தேவா ! உலகத்தில் பெண்கள் எந்த விரதத்தைச் செய்தால் புத்திர பௌத்திராதி சகல சம்பத்து உண்டாகி சுகம் அடைவார்களோ அப்போப்பட்ட விரதம் ஒன்றை எனக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்ட போது பரமேஸ்வரன் சொல்லத் தொடங்கினார்.

"ஓ பிரியே ! பெண்களுக்கு சர்வசம்பத்கரமானதும் புத்திர பௌத்திராப்பிய விருத்தியும் உண்டாகும் படியான வரலட்சுமி விரதம் ஒன்று உண்டு. அந்த ஆவணி மாதம் பூர்வ பட்ச அல்லது சுக்கில பட்ச பருவத்திற்கு முன்னே வரும் வெள்ளிக்கிழமையில் செய்ய வேண்டு" என்று சொன்னார்.

"பார்வதியானவள் அப்போது பரமேஸ்வரரை நோக்கி மஹா பிரபு தங்களால் சொல்லப்பட்ட இந்த விரதம் எவ்விதமாய் எந்த தேவதையை எந்தக் காலத்தில் பூசிக்க வேண்டியது, பூர்வத்தில் இந்த விரதம் யார் அனுஷ்டித்து பயனடைந்தார்களோ அந்த விரதக் கதையையும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று பிரார்த்திக் கேட்டாள்.

பரமேஸ்வரர் பார்வதியை நோக்கி சொல்லத் தொடங்கினால் "ஓ காத்யாயினி இந்த வரலட்சுமி விரதத்தை விபரமாக சொல்கிறேன் கேள் மகததேசத்தில் குண்டில புரமென்று ஓர் பட்டணம் உண்டு அப்பட்டணமானது. பொன்மயமான கோபுரங்களாலும்

மெத்தை மேடைகளாலும், மதில்களாலும் மிக அலங்காரமாய் இருந்தது. அப்பட்டணத்தினில் சாருமதி என்னும் ஓர் ஒரு பிரமணத்தினர் இருந்தார். அப்பெண்மனி மிக பதிவிரதை, பதிபக்தியும், பெரியோர்களிடத்தில் பயபக்தியும், தெய்வபக்தியும் கொண்டு விளங்கி வந்தார்.

தன் கணவனையே தெய்வமாக நினைத்து, தினம் உதயகாலத்தில் எழுந்து பதியை நமஸ்கரித்து பாதங்களை கழுவி, புஷ்பங்களால் பூஜை செய்து, பிரகு மாமி மாமனுக்கும் தகுந்த பணிவிடைகள் செய்து விட்டு வேலைகள் செய்ய தலைப்படுவாள் தவிர யாரிடத்திலும் இனிமையாகவும் மேண்மையாகவும் பேசுவாள் இப்படி கற்குடலில் இருந்த அந்த பெண் விசயத்தில் மகாலட்சுமிக்கு மிக கருணை உண்டாகி அனுக்கிரகித்தாள்.

"ஒரு நாள் இராத்தரி சாறுமதியின் சொப்பனத்தில் வரலட்சுமி தேவி பிரசன்னமாகி, ஓ சாருமதி ! உன்னிடத்தில் எனக்கு கிருபை உண்டாகி உனக்கு அனுக்கிரகிக்க பிரயத்தமானேன். ஆவணி மாதம் பூர்வபட்ச பருவத்திற்கு முன்பு வரும் சுக்கிர வாரத்தில் என்னை பூசித்தால் உன் கோரிக்கைகளை பூர்த்தி செய்கிறேன்" என்று சொல்ல உடனே சாருமதி தன் கனவிலேயே லட்சுமி தேவியை வலம் சுற்றி வந்து நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்தாள்.

"சாருமதி உடனே கண்விழுத்தெழுந்து வீட்டின் நான்கு புரமும் சுற்றிப்பார்த்து, வரலக்ஷ்மி தேவியை காணாமல் ஓஹோ ! நான் கனவு கண்டேன் ! என்று அறிந்து இந்த சொப்பன விருந்தாந்தத்தை தன் கனவரிடமும், மாமி மாமனாரிடமும் சுற்றும் உள்ளவர்களிடமும் சொன்னால்.

அவர்கள் இந்த கனவு மிக உத்தமமானது, ஆவணி மாதம் வந்தவுடனே மகாலக்ஷ்மி சொன்ன நாளில் கனவில் கண்டபடி மேற்படி விரத்தை அவசியமாய் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள்.

பிறகு சாருமதியும் மற்றவர்களும் அந்த நாளை எதிர்பார்த்திருந்தி வரலக்ஷமியால் சொன்ன நாள் வந்தவுடனே அந்த வெள்ளிக்கிழமையில் உதய காலத்தில் விழித்துக் கொண்டு ஸ்நானம் செய்து அனேக சித்திரமான பட்டுவஸ்தரிங்களை உடுத்தி சாருமதிதேவியின் வீட்டில் ஓர் இடத்தில் கோமயத்தால் மெழுகி மண்டபம் ஏற்படுத்தி அங்கே ஒரு ஆசனம் போட்டு அவ்விடத்தில் கோலங்களிட்டு புதிதான அரிசியை கொட்டி ஆலம், அரசன் குரு வேலன், அத்தி, மாவிலைக்கிளைகளும், வெற்றிலை முதலிய பஞ்ச பல்வங்கள் வைத்து ஓர் தேங்காயுடன் கலசம் அலங்கரித்து வரலட்சுமி தேவியை அந்தக் கலசத்தில் ஆவாஹணம் செய்து, மஹபக்தியும் வணக்கமும் உள்ளவர்களாய் சாயங்காலத்தில் அந்த வரலட்சுமி தேவியை தியானத்திற்கு செல்லுகிறார்கள்.

சுலோகம் "பத்மாஸதே பத்மகேரே ஸர்வலோக பூசித்தே நாராயண பிரியே தேவி ஸுப்ரிதாப்பவ ஸர்வதா" என்ற சுலோகத்தினால் வரலக்ஷ்மி தேவியை தியானித்து, சோபவார பூஜைகள் செய்து ஒன்பது இலைகளும் முடிகலும் உள்ள நோன்புக் கயிறு என்னும் தோரத்தை வலது கையில் கட்டிக்கொண்டு வரலக்ஷ்மி தேவிக்கு ஒன்பது வித பலகார தினுசுகள் நிவேதம் செய்து கற்பூர தீபாரனை செய்து பிரதட்சன நமஸ்காரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

ஒரு தரம் வளம் சுற்றி வந்தவுடனே அந்த பெண்களுடைய கால்களில் கல்கல் என்று ஓசையுண்டாச்சுது. உடனே எல்லோரும் தங்கள் கால்கனை பார்த்துக்கொள்ள. சலங்கை முதலிய ஆபரணங்கள் உண்டாகியிருக்கக்கண்டு சாருமதி முதலிய பெண்கள், ஓஹோ ! வரலக்ஷ்மி கடாச்சத்தினால் இந்த ஆபரணங்கள் உண்டாகின ! என்று மிகக்களித்து இரண்டாவது பிரதட்சனம் செய்ய, ஹஸ்தங்களில் தளதளவென்று பிரகாசிக்கும்படியான நவரத்தின கசிதமான கங்கணாதி ஹஸ்தாபரங்களை பார்த்தார்கள் அதிசமாய் சொல்ல வேண்டியது யாது ? மூன்றாவது பிரதட்சன செய்தவுடனே அந்த பெண்கள் எல்லோரும் ஸ்வாபரண பூஷணாலங்க்ருதார் களானார்கள் ரகாதி வாகனங்களுடன் நிறைந்ததான வெத்தை மேடைகளுடன்

கூடியதாய் உள்ள வீடுகள் சாருமதி முதலிய பெண்களுக்குள்ளாகின பிறகு அந்த பெண்மணிகளை அழைத்துக் கொண்டு போக, அவர்களின் வீடுகளிலிருந்து வேலை காரர்கள் பல விதமாயுள்ள வாகனங்களுடன் வரலட்சுமி தேவியை பூஜிக்கும் பணியான இடம் வந்து நிறைந்திருந்தார்கள்.

அப்போது சாருமதி முதலிய பெண்களுக்கு கல்போது விதிப்படி இவர்கள் கையால் பூஜைசெய்து வைத்த பிராமணோத்தமைக் கண்ட பூஸ்பாதைகளால் பூசித்து, அவ்விடத்தில் சுவாமிக்கு நிவேதனமாக பலகார தினிசுகளில் பன்னிரெண்டு எண்ணுள்ளதான பலகார வகைகளையும் தட்சணாதி தாம்பூலங்களுடனும் அவர்களுக்கு உபாயணம் கொடுத்து நமஸ்கரித்து அவருக்கு வந்தனரின் ஆசீர்வாதம் அடைந்து பிறகு அத்தேவிக்கு நிவேதித்த மீதி பட்ஸணங்களை தங்கள் பந்துக்களுடன் புசித்து தங்களை அழைத்துக் கொண்டு போன வந்திருந்த வாகனங்களில் ஏறிக்கொண்டு, தாங்கள் தங்கள் வீடுகளை நோக்கி போகும் போது சாருமதி தேவியின் பாக்கியமே பாக்கியமென்று சொல்லலாம்! வரலக்ஷ்சுமி தேவி நேராகச் சாருமதியின் சொப்பனத்தில் பிரத்யட்சமாகி சொல்லியபடியே செய்தாள் அவளால்லல்லவோ நாம் எல்லோரும் மகா பாக்கியவதிகளானோம். என்று அச்சாருமதி தேவியை மிகப் புகழ்ந்து பேசிக்கொண்டே அவர் அவர் வீடுகளுக்கு போய் சேர்ந்தார்கள்.

அது முதல் சாருமதி முதலிய பெண்கள் எல்லோரும் இந்த வரலக்ஷ்மி விரதம் பிரதி வருஷமும் செய்து புத்திர பௌத்திர விருத்தியாய் சகல சம்பத்துடன் வாழ்ந்து இருந்தார்கள் ஆகையால் ஓ பார்வதி! இவ்வுத்தம விரதத்தை பிரமணாகி முதல் 4 ஞாதியர்களும் செய்யலாம் அப்படி செய்பவர்களுக்கு சகல ஜமபத்துடணாகி சுகமாய் இருப்பார்கள். இக்கதையை கேட்கிறவர்களும் படிக்கிறவர்களும் விரத பூர்த்தி செய்கின்றவர்களும் வரலக்ஷ்மி பிரசாதமுண்டாகி சகல காரிய சித்திகளும் அடைந்து பிரகு சத்கதி அடைவார்கள். ப்விஷ்யோத்திர புராணத்தில், பார்வதி, பரமேஸ்வரர் ஸம்வாதத்தில் இவ்வரலக்ஷ்மி விரதம் சொல்லப்பட்டது.

வரலக்ஷ்மி விரத கதை சம்பூரணம்

## கேதார கௌரி நோன்புக் கதை

ஆதிக் காலத்தில் ஸ்ரீ கைலாயத்திலே நவரத்திரனங்களினா லிளைத்த சிங்காசனத்தின் மீது பரமேஸ்வரரும் பார்வதி தேவியும் கொலு வீற்றிருக்கையில் பிரம்மா, விஷ்ணு, தேவேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தொண்ணாயிரம் ரிஷிகள் அஷ்டவசுக்கள், கின்னரர்கள, கிம்புருடர், கருடர்காந்தர்வர் சித்தவித்தியாதரர் ஜனகஞனனதாரி, ஸனத்குமாரர் தும்புஜநாரதர் மற்றும் உண்டான தேவரிசிகள் பிரதிதினம் வந்து பரமசிவனையும் பார்வதி தேவியையும் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து கொண்டு போவார்கள், இப்படி இருக்க ஒரு நாள் ஸமஸ்த தேவர்களும் ரிஷிகளும் வந்து ஈஸ்வரனையும், ஈஸ்வரியையும் பிரதட்ஷினை நமஸ்காரம் தோத்திரம் செய்து செலவு, (விடை) பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் ஏகாஸ்தானங்களுக்கு போகிற சமயத்தில் பிருங்கி என்கிற ரிஷி ஒருவர் மாத்திரம் பார்வதி அம்மனை பிரம்பாக தல்லி ஈஸ்வரரை மாத்திரம் பிரதட்ஷசண நமஸ்காரம் செய்து ஆனந்த கூத்தாடினார். அப்பொழுது பார்வதி அம்மனுக்கு மகா கோபம் உண்டாகி பிரம்மா, விஷ்னு, உருத்திரன், தேவேந்திரன் முதலான 30 முக்கோணி தேவர்களும் நாற்பத்தொண்ணாயிரம் ரிஷிகளும் அஸ்ட வசுக்களும் கின்னரரர் கிம்புருடர், கருட காந்தர்சவர், சித்த வித்தியாதரர், ஞனகஞனனதாரி, சனத்குமாரர், தும்புஜ நாரதர் கௌத்தமர் அகஸ்தியர் மற்றும் உண்டான தேவர்களும் வந்து ஈஸ்வரரையும் நம்மையும் கண்டு வணங்கிப் போகின்றனர். இந்த பிருங்கி மகரிஷி நம்மை புறம்பாக தள்ளி ஈஸ்வரரை மாத்திரம் நமஸ்கரித்து நின்றானே என்று கோபத்துடனே பரமேஸ்வரி கேட்க பரமேஸ்வரன் சொல்லுகிறாள் "பர்வதராஜ குமாரியே" பிருங்கிரிஷி பாக்கியத்தை கோரினவனல்ல, மோட்சத்தை கோரினவன் ஆனபடியால் எம்மை மாத்திரம் பிரதட்ஷ்ண நமஸ்காரம் செய்தான்" என்று சொல்ல பரமேஸ்வரி பிருங்கி ரிஷியை பார்த்து "ஓ! பிருங்கி ரிஷியே உண் தேகத்திலே இருக்கின்ற இரத்தம் மாமிசம் நம்முடைய குராச்சுதே ! அவைகளை நீ கொடுத்து விடு" என்று சொல்ல அப்பொழுது பிருங்கி ரிஷி தன் சரீரத்திலிருந்து இரத்த மாமிசத்தை எடுத்துக்கொள் பிரகு பிரங்கி மகாரிஷி நிற்கமுடியாமல் அசத்தநா யிருப்பதை பார்த்த பரமேஸ்வரர் "ஏ பிருங்கி மகா ரிஷியே ! ஏன் அசக்கனானாய்"? என்று கேட்க பிருங்கி பரமனை வணங்கி "பரமேஸ்வரா ! அம்பிகை நீக்கி தங்களை மட்டும் வணங்கினதால்

அம்பினை கோவித்து அடியேனுக்களித்த தண்டனை இது என்று" கூற பரமேஸ்வரன் மனமிரங்கி ஒரு தண்டை கொடுக்க பிருங்கி மகாரிஷி தண்டை ஊண்டிக்கொண்டு மறுபடியும் பரமேஸ்வரரை நமஸ்கரித்து விட்டு ஆச்சிரமத்திற்கு ஏக எழுந்தருளினார். பிரகு பரமேஸ்வரி பரமேஸ்வரரை பார்த்து நீர் என்னை உபேக்ஷை செய்யலாமோ இனி எனக்கு காரியமென்னவென்று கையிலாயத்தை விட்டு பூலோகத்தில் வால்மீகி மகாரிஷி சஞ்சரிக்கும் நினற் பூங்காவனத்தில் ஒரு விருட்ஷத்தின் அடியில் எழுந்தருளியிருந்தால் அத்திசையில் பன்னிரெண்டு ஆண்டு மலையின்றி விருக்ஷங்கள், செடிகள், உளர்ந்து வாடியிருக்க அவையெல்லாம் துளிர்த்து தலைத்து புஷ்பித்து, காய்த்து பழுத்து இன்னும் அநேக பூச்செடிகள் எல்லாம் மல்லிகை, முல்லை, கொங்கு, இருவாக்ஷி, மந்தாரை, பாரிஜாதம், சண்பகம், சிறு முல்லை, புன்னை, பாதிரி, வில்வம், பத்திரி, துளபம், முற்றும் உண்டான சகலஜாதி புஷ்பங்கள் விஸ்தாரமாய் புஷ்பித்து பரிமளித்து சுற்றிலும் நாலுயோசனை விஷ்திரனும், பரிமளம் விசினது அந்த சமயத்தில் வாழ்மீகி மகரிஷி தம் பூங்காவனத்தை பார்த்து அதிசயப்பட்டு பன்னிரெண்டு வருஷம் மழையில்லாமல் உளர்ந்து இருந்த விருக்ஷங்கள் எல்லாம் இப்பொழுது துளிர்த்து புஷ்பித்து காய்த்து பழுத்திருக்கின்ற ஆச்சரியம் என்னவோ தெரியவில்லையென்றே மனதில் நினைத்துக்கொண்டு பூங்காவணத்திற்கு வந்தார்.

வந்தவர் சகல புவன கர்த்த ஆகிய பரமேஸ்வரன் பரமேஸ்வரி பிரம்மா விஷ்னு வந்திருக்கிறார்களோ அவர்களை காண வேண்டும் என்று அந்த வணம் எல்லாம் சுற்றி ஆராய்ந்து பார்க்கையில் ஸ்ரீ பார்வதி தேவி வில்வ விருட்ஷத்தின் அடியில் எழுந்தருளியிருக்க கண்டு மூவருக்கு முதன்மையான தாயே ! முற்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்திதொன்னாயிரம் முனிவர்களுக்கும் ஒப்பற்ற தெய்வமாய் நின்ற பராசக்தியே ஈஸ்வரியே நான் எத்தினை கோடி தவமம் செய்தேனோ இந்த பூங்காவணத்தில் எனக்கு காட்சிக் கொடுக்க கைலாயத்தை விட்டு பூலோகத்தற்கு நீர் எழுந்தருளியதென்னவோ என்று வால்மீகி முனிவர் கேட்க பார்வதி தேவியார் "வால்மீகி முனிவரே ஸ்ரீ கைலாயத்தில் பரமேஸ்வரரும் நாமும் ஒரு நவரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருக்கையில் பிரம்மா, விஷ்னு, தேவேந்திரன், முதலான தேவர்களும் மற்றும் உண்டான மகா ரிஷிகளும் வந்து

இருவரையும் நமஸ்கரித்து போனார்கள். பிருங்கி முனிவர் சுவாமியை மாத்திரம் நமஸ்கரித்து நம்மை புரம்பாக தள்ளினான் அப்பொழுது இவனா நம்மை புரம்பாக தள்ளுகிறவன் என்று கோபத்துடன் என் கூரான இரத்த மாமிசத்தை வாங்கிக்கொண்டேன் அப்பொழுது பரமேஸ்வரர் அவனுக்கு ஒரு தண்டு கொடுத்தார் இப்படி செய்யலாமோ என்று கேட்டதற்கு அவர் மறுமொழி சொல்லவில்லை. ஆகையால் நமக்கு கோபம் பிறந்து பூலோகத்திற்கு வருகிற போது இந்த பூங்காவனத்தைக்கண்டு இங்கு தங்கினோம் என்று பார்வதி அம்மையார் வாழ்மீகியருக்கு உறைக்க அவரும் அம்பிகையை தன் ஆசீரமத்திற்கு எழுந்தருழும் படி வேண்டி அம்பிகையையும் அவர் இஸ்டபடியே எழுந்தருள முனிவர் அம்மன் இருக்க ஒரு ஆசிரமம் ஒரு நவரத்தின சிம்மாசனமும் உண்டு பன்னி அந்த சிம்மா சனத்தின் மீது எழுந்தருளின பின் பரமேஸ்வரி வால்மீக முனிவரைப்பார்த்து ஓ ! தவசியே இந்த பூலோகத்தில் நான் ஒரு விரதம் அனுஷ்டிக்க வேண்டும் நூதனமும் மேலான தூய்மையான விரதம் ஒன்றிருக்குமாயின் அதை எனக்கு சொல்ல வேண்டும, என்று கேட்க வால்மீகி முனிவர் தொழுது தாயே லோகமாதாவே ! அபிராமியே ! திருப்புரமாவே சிவகாமி ! கௌரி கய்லாச வாசகி ! விபூதி ! ருத்ராஷி ! கிருபாச முத்ரி கிருபானந்தி தேவஸ்ரூபி உம்முடைய சன்னிதானத்தில் அடியேன் ஒரு விண்ணப்பம் செய்கிறேன் கோபமில்லாமல் கேட்டு திருவுள்ளம் பற்ற வேண்டும் என்று சொல்ல அதன்ன வேண்டு அம்பிகை கேட்க ஜெகத்ரஷியே ! இந்த பூலோகத்தில் ஒருவருக்கும் தெரியாத ஒரு விரதம் உண்டு அந்த விரதத்திற்கு கேதாரேஸ்வரர் நோன்பு என்று பெயர். அதை இதுவரையில் யாரும் அனுஷ்டிக்கவில்லை. நீர் அந்த விரதத்தை அனுஷ்டித்தால் இஷ்ட சித்தியாகும் என்று சொன்னார் அதை பரமேஸ்வரி கேட்டு அந்த விரதம் எக்காலத்தில் எவ்விதமாக அனுஸ்டிக்க வேண்டும் விபரமாய் சொல்ல வேண்டும் என்று கேட்ட வாழ்மீகி சொல்லிகிறாள் புரட்டாதி மாதம் சுக்கிலபட்ச தசமி தொடங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ன பட்சம் தீபாவளி அம்மாவாசை வரைக்கும் இருபத்தொருநாள் பிரதி தினம் இஸ்நானம் செய்து சுத்த வஸ்திரம் அணிந்து ஆலய விருட்ஷத்தின் கீழ் சிவலிங்க பிரதிஷ்சை செய்து அபிஷேகம் செய்து விபூதி சந்தனம் புஸ்பம்சாத்தி வெல்ல உருண்டை, சந்தன உருண்டை, மஞ்சள் உருண்டை, அதிரசம், வாழைப்பழம், தேங்காய், பாக்கு, வெத்திலை, இவைகளை வகைக்கு ஒன்றாக வைத்து

விஸ்வாச்சனை தூப தீபம் நைவேத்தியஞ் செய்து நமஸ்கரித்து இருபத்தொருழையிலே ஒரு கயிறு முறுக்கி அதைத் தினம் தினம் ஒரு முடியாக இருபத்தொரு நாள் முடிந்து தினமும் உபவாசம் இருந்து நெய்வேத்தியம் செய்து அதிரசத்தையுண்டு இருபத்தொருநாளும் கிரமமாக இவ்விரதத்தை அனுஷ்டித்தால் இருபத்தோராம் நாள் தீபாவளி அம்மாசை தினம் பரமன் ரிஷப வாகன புருஷராய் காட்சியளித்து கேட்டவரத்தைக் கொடுப்பார் வால்மீக சொல்லைக் கேட்டு, அம்பிகை மகிழ்ந்து அதே பிரகாரம் ஐப்பசி மாதம் சுக்கிலபட்சம் தசமீ முதல் அமரபட்சம் சதுர்த்தி அமாவாசை வரை இருபத்தொருநாளும் வால்மீகர் தெரிவித்தப்படி நியம நிஷ்டையுடன் உபவாசம் இருந்து விரதம் அனுஷ்டிக்க பரமேஸ்வரி விரதத்திற்கு மகிழ்ந்து பரமன் தேவ கணங்கள் புடைசூழ காட்சியளித்து இடபாகத்தை பரமேஸ்வரிக்கு கொடுத்து அர்த்தநாரீஸ்வரராக கையாலயத்திற்கு எழுந்தருளி வீற்றிருந்தார்.

இவ்விரதத்தின் மேன்மையைக் கண்ட தேவர்கள் ரிஷிகள் முதலானவர்களும் அன்று முதல் இந்த விரதத்தை அனுஷ்டித்து வரலாயினர் தேவ கண்ணிய இவ்விரதத்தை கங்கை கரையில் அனுஷ்டிப்பதை பூலோகத்திலே ஓர் அரசனுடைய குமாரத்தி கலான புன்னியவதி பாக்கியவதி என்னும் இருப்பெண்கள் தன் தகப்பன் நாடு நகரீலந்ததன் பயனாக விவாகமாகாத கண்ணியர் கங்கைக்கரை வர அச்சமயம் தேவ கண்ணிய இயற்றும் பூஜையைக் கண்டு அதன் விபரம் அறிந்து தேவ மங்கையர் கொடுத்த நோன்புக் கயித்தையும் பெற்று வீட்டிற்கு போக வீடு அடையாளம் தெரியாமல் குச்சு வீடு மாடமாளிகையாக மாறி அஷ்ட அஷ்ட ஐஸ்வர்யம் பெருகியிருக்கும் புதுமையைக் கண்டு ஆச்சரியம் அடைந்து நிற்கையில், தகப்பன் தனது குமாரத்திகளை அழைத்து சென்று சுகமாக வாழ்ந்து வரும் நாளில் இராஜகிரி அரசன் புண்ணியவதியையும் அழகா புரி அரசன் பாக்கியவதியையும் மணந்து தத்தம் ஊர்களுக்கு சென்று புத்திரபாக்கியத்துடன் வாழ்ந்து வந்தனர்.

இங்ஙனம் வாழ்ந்து வரும் நாளில் பாக்கியவதி கையிலணிந்திருந்த நோன்புக் கயிற்றை அவரைப்பந்தலின் மேல் போட்டு மறந்து போனதன் விளைவாக பாக்கியவதியின் நாட்டை வேற்றரசன் கைப்பற்றிக் கொண்டு இவர்களை ஊரைவிட்டுத் துரத்திவிட்டான். பாக்கியவதியும் அவள் புருஷனும் நித்திய

தரித்ர்களாகி உண்ணை உணவும் உடுக்க உடையும் இன்றி இருக்கையில் நோன்புக் கயிறு அவரைப் பந்தலில் இருந்ததால் அவரைக் காய் மிகுதியாகக் காய்க்க பாக்கியவதி அந்த அவரைக் காய்களை சமைத்து புசித்து ஜீவித்து வந்தனர்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் பாக்கியவதி தன் குமாரனை அழைத்து "அப்பா" நாம் நாடு நகரிழந்து உண்ண உணவுக்கும் உடுக்க ஆடைக்கும் கஷ்டப்பட்டு கொண்டிருக்கின்றோம். ஆகையால் நீ இராஜகிரிக்கிப்போய் உண் பெரிய தாயான புண்ணியவதி சகல ஐய்ஸ்வரியத்துடன் வாழ்வதால் அவளிடம் நம்முடைய தற்கால நிலைமையைத் தெரிவித்து கொஞ்சம் திரவியம் கேட்டு வாங்கி கொண்டு வா என்று சொல்லி கட்டமுது கட்டிக் கொடுத்து வழியனுப்பினால். அந்த இராஜகரிக்கு போய் தன் பெரிய தாயாரைக் கண்டு தங்கள் வர்த்தமானகங்களை சொல்ல தாபபந்தியபட்டு பிள்ளையை 4 நாள் வைத்திருந்து சில வஸ்திரங்களும் ஆபரணமும் திரவிய முடிப்பும் கட்டமுதும் கட்டிக் கொடுத்து அனுப்பினால் அதை வாங்கிக் கொண்டு சில தூரம் வந்து ஒரு குளக்கரையில் வந்து மூட்டையை வைத்து விட்டு கட்டமுது சாப்பிடுகிற சமயத்தில் மூட்டையை *கருடன் எடுத்துக் கொண்டு போய்விட்டது. அதை கண்ட சிறுவன் மணஸ்தாபம் பட்டு மீண்டும் பெரிய தயாரிடம் சென்று நடந்ததை சொல்ல அவள விசனப்பட்டு மறுபடியும் சில திரவியம் கட்டிக் கொடுத்து அனுப்பினால்.

அதையெடுத்துக் கொண்டு வரும் போது வழியிலே ஒரு திருடன் வந்த சிறுவனிடம் இருந்த மூட்டையை பரித்துக் கொண்டு போய் விட சிறுவன் துக்கப்பட்டு கொண்டே மறுபடியும் பெரிய தயாரிடம் சென்று அம்மா ! நாங்கள் செய்த பாவம் என்னவோ தெரியவில்லை இரண்டாவதாக கொடுத்த திரவியங்களையும் திருடன் பரித்துக் கொண்டு போய்விட்டான். என்று சொல்லி வருந்தும் சிறுவனை தேற்றி குழந்தாய் உன் தாயார் கேதாரேஸ்வரர் நோன்பு விரதத்தை அனுஸ்டிக்கிறது இல்லை. முன்பே நோன்பு கயிற்றையும் அவரை பந்தளில் மேல் போட்டுவிட்டார். அன்று முதல் இவ்விதக் கஷ்டங்கள் வந்தது என்று தெரிகின்றது. என்று கூறினால். இதைக் கேட்ட புண்ணியவதி மிகவும் மணம் வருந்தி ஐப்பசி மாதம் வருந்தனிலும் சகோதரி

குமாரனை தன்னிடமே நிறுத்திக் கொண்டு ஐப்பசிம மாதம் தான நோக்கின்ற நோன்போடு கூட பாக்கியவதிக்கும் ஒரு பங்கு நோன்பு வைத்து நோற்று அந்த நோன்பு கயிறும், பலகாரமும், பாக்கு. வெற்றிலை, மஞ்சளும் இன்னும் சில ஆடை ஆபரணங்களையும் திரவியமும் கொடுத்து காவலாக சில சேவகரையும் கூட்டி இனிமேலாவது இந்த நோன்பை விடாமல் நோற்க சொல்லி புத்திமதிகளையும் சொல்லி அனுப்பினால்.

பெரிய தயாரிடம் விடைபெற்று வரும் பொழுது முன்னே வழியில் பரித்துப்போன திருடன் திரவியத்தை கொடுத்துச் சென்றான். கருடன் மூட்டையை கொண்டு வந்து போட்டு விட்டு உன் தாய் கேதாரேஸ்வரர் நோன்பு விரதத்தை விட்டு விட்டதினாலேயே இவ்விதம் வந்தது இனிமேல் பயபக்த்யுடனே நோன்பு நோற்ச்சொல் என்று சத்தமுண்டாக்கி கூற சிறுவன் ஆச்சரியப்பட்டு பயபக்தியோடும் சந்தோசத்தோடும் வீட்டுக்கு வந்து தாயிம் கையில் பெரிய தாயாரால் கொடுக்கப்பட்ட நோன்பு கையிற்றையும், பலகாரத்தையும் முன்னே கொடுத்துப் பிறகு தனத்தையும் கொடுத்து நடந்த விஸ்தாரங்களையும் சொல்ல கேட்ட பாக்கியவதி மெய்தான் என் ஆங்காரத்தினால் கெட்டேன் என்று சொல்லி ஸ்நானஞ் செய்து கேதாரீஸ்வரரை நமஸ்காரம் செய்து கயிற்றை வாங்கிக் கட்டிக் கொண்டால். அந்த நாளிகைக்கே தங்கள் பட்டணத்தை பிடிங்கிக் கொண்ட அரசன் பட்டனத்தையும், யானை, சேனை, பரிவாரங்களையும் பகுதியையும் கொடுத்து விட்டு போய் விட்டான்.

பிறகு முன்போலவே பாக்கியவதிக்கு அஷ்டஐஸ்வரியமும் உண்டகவே தான் முன்நோக்கத்தவறியபடியினாலே கேதாரீஸ்வரர் வறுமையை தந்தாரெண்டு அறிந்து அன்று முதல் நோன்பை கைப்பற்றியதால் சகல சம்பத்தும் பெறுகி சுகபோகத்தோடு வாழ்ந்து வந்தாள்.

ஆதலால் இப் பூலோகத்தில் கேதாரி விரதத்தை மனபூர்வமாக விரும்பி செய்பவர்களுக்கு பரமேஸ்வரன் சகல செல்வங்களையும் அனுக்கிரகிப்பார்.

அன்பர்கள் இந்த நோன்பைப் பக்தி வினையத்தோடு செய்து சுகஷேமங்களையும் அடைந்து மேன்மையாக வாழ்வார்களாக.

கேதாரேஸ்வரர் நோன்பு கதை முற்றிற்று.

சுபம்

உ

சிவமயம்



# திருவெம்பாவை

(சக்தியை வியந்து - மாணிக்கவாசக சுவாமிகள்)

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதேவளருதியோ வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே!
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்! 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்? நேரிழையீர்!
சீசி இவையும் சிலவோ? விளையாடி
ஏசு மிடம்ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்? 2

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர்! ஈசன் பழ அடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம்அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்! 3

ஒள்நித் திலநகையாய் இன்னும் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய் ! 4

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்! 5

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந் தெம்மைத் தலை அளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோர் எம்பாவாய் ! 6

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என் அரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோம்
வன்னஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய் ! 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்! 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே !
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றஉன்சீரடியோம்
உன்அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்! 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்? 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயாவழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்! 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச் சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கழல்கள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்ணடார்ப்பப்
பூர்த்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்! 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் ! 13

காதார் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல் ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்! 14



ஓரொருகால் எம்பெருமான் என்றேன்றேநம் பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆம்ஆறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையான்
என்னத் திகழ்தெம்மை ஆளுடையான் இட்டிடைமின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலப்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைக்குலவி நந்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்! 16

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்நம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 17

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடேலோர்எம்பாவாய்! 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்! 19

போற்றி அருள்கநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருள்கநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகாமம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்! 20



## சக்திக் கவசம்

1) சஞ்சலம் நீங்கிட சக்தியை தேடினேன் பிள்ளையார் அப்பா
ஓம் என்று ஒளிர்த்து நிற்கும் கருப்பொருளே
அரனார் திருமுதலே ஆறுமுகன் அண்ணலே மாயோன் மருகனே
அடியவளுக்கு அருள் புரிந்து அடியெடுத்து தாருமையா

அம்மையே அப்பா என்ற பாலனுக்கு
ஞானப்பால் தந்த உமையே
எம்மை ஆட்கொள்ள வாராயோ தாயே
இம்மைக்கும் மறுமைக்கும் நீயே துணை
அம்பிகையே அபிராமியே சரணம் சரணம்

அம்மையே அப்பா

ஈஸ்வரனுடன் இணையாக ஆடிய என் அன்னையே
ஈஸ்வரியே அமாவாசை நாளில் காதணி எறிந்து - வானில்
பூரணநிலவு காட்டிய எம் அன்னையே பொன்மகளே
பூரணி ஆரணி தாரணி என பல நாமம் கொண்ட
அம்பிகையே அபிராமியே சரணம் சரணம்

அம்மையே அப்பா

அருள் நிறைந்த அம்பிகையே வருக வருக
வருக வருக வடிவரசி வருக - ஆனைமுகன்
ஆறுமுகன் அன்னையே வருக எம் வினைகள் அகற்றி
ஆறுதல் தர வருவாய் வித்தகி விசாலாட்சி
காக்க காக்க காளி மகாமாயி காக்க
அங்கயற்கன்னி அமந்திருந்து காக்க
ஆக்கமும் ஊக்கமும் தந்து அபிராமி காக்க
இல்லங்கள் தோறும் இலட்சுமி காக்க
ஈஸ்வரிதாயே இதமுடன் ஈனர்களையும் காாக்க
உருண்டோடும் உலகை உமாதேவி காக்க
ஊர் பேர் எல்லாம் புவனேஸ்வரி காக்க
ஐம்புலன் தன்னை ஐயை சிவகாமி காக்க
எங்கும் நிறைந்த எம் அன்னையே
ஏற்றம் அளித்து எல்லோரையும் காக்க

ஒளியையும் ஒலியையும் ஓங்காரி காக்க
ஓம் என்ற சக்தியே போற்றி போற்றி
ஔவிடமான எம் அற்புதயே தயாபரியே
ஔவியம அகற்றி ஆனந்தமாக காக்க
கருணைக்கடலாம் கற்பகவல்லி காக்க
காஞ்சி காமாட்சி களிப்புடன் காக்க
கிரிதரன் சோதரியே இப்பாரினைக் காக்க
கீத்தித் திருயே கீதத்தின் கருப்பொருளே
குருவாக வந்து கிருபாகரி காக்க

கூற்றவன் பயத்தை போக்கிய காக்க
கெடுதிகள் நேராவண்ணம் பக்கமிருந்து காக்க
கேதாரநாயகியே கோமகளே கொற்றவையே
கைகூப்புகிறோம் கைலையம்மை காக்க
கொலுவில் வந்திருந்து கோதை மாதுமை காக்க
கோபாலன் சோதரியே நாகபூசனித் தாயே சக்தியே
கௌரி காயத்திரி காலமெல்லாம் காக்க - எம்
சந்ததியெல்லாம் சக்தி நீயே காக்க

சாமளை சங்கரி சாம்பவி காக்க
சிங்கத்திலே ஏறிவந்து சிவசக்தி காக்க
சீர்மிகு நாகபூசனித்தாயே -சூழலும் உலகையும்
சூதுவாது வேரனக் காக்க
செல்வமும் கல்வியும் தந்து செழிப்புறக் காக்க
சேவை செய்யும் தொண்டர்களைக் காக்க காக்க
சைவமும் தமிழும் வளம் பெறக் காக்க

சொல்லும் பொருளும் சுவைபடக்காக்க
சோர்வுறும் போதெல்லாம் திரிபுரசுந்தரி காக்க
சௌந்தரியே சரஸ்வதியே தயவுடன் காக்க
ஞானத் திருவுரு ஞானேஸ்வரி காக்க
ஞாலத்தை என்றும் நாகலட்சுமி காக்க
தர்மத்தை என்னும் தாட்சாயினி காக்க
தாபமும் கோபமும் தவிர்த்தே காக்க
திசைகளை எல்லாம் திரிசூலி காக்க

தீராத பகையையும் பிணியையும் வேரறக்காக்க
துரந்தரியே நிரந்தரியே துர்க்கைத்தாயே
துயரத்தை வெல்ல துணிவைத் தந்து காக்க
தூயவளே முத்துமாரி பரிவுடன் காக்க
தெளிவையும் துணிவையும் தந்து காக்க
தேவரும் மூவரும் போற்றும் மீனாட்சி காக்க
தைரியத்தை தந்து தைரியலட்சுமி காக்க
தொப்பையப்பன் முறிவண்டி விநாயகன் தாயே
தோத்திரம் ஓதும் குழந்தைகளைக் காக்க
தௌத்திர மாலை அணிந்தவளே எம்மைக் காக்க
நடராஜனுக்கு இனியவள் நடனி பார்வதி காக்க
நாமகளே பூமகளே நலிவுறும் மக்களைக் காக்க
நித்தம் நித்தம் உன் திருவடி காக்க
நீலி திரிசூலி மகாகாளி மந்தாயினி காக்க
நுடங்கா நுண்மையளே காக்க
நூலறிவுடன் எம் புத்தியையும் காக்க
நெற்றிக் குங்குமம் நிலைபெறக் காக்க

நேரத்தையும் காலத்தையும் திருமகள் காக்க
நைந்திடும் நிலையை நீக்கியே காக்க
நௌவி விழி நாயகியே கண்ணைக் காக்க
நோக்கும் வாக்கும் என்றும் காக்க
பகவதித் தாயே பலமுடன் காக்க
பாவவினைகளை போக்கியே காக்க
பில்லி சூனியம் வஞ்சகப் பேய்கள் விலகிடக்காக்க
பீடுடைய பெருமாட்டியே எம்மை காக்க
புத்தியை தந்து சித்திபெறக் காக்க
பூமாதேவியின் பொறுமையைக் காக்க
பெற்ற பெருவாழ்வு சிறப்புறக்காக்க
பேதமையகன்று பேறுகள் பெற்றிட
பைரவி பரமேஸ்வரி பரிவுடன் காக்க
பொல்லாங்குகள் வராது நாராயணி காக்க
போட்டியும் பொறாமையும் போக்கி காக்க

பௌத்திரமிக்க பௌரணியே காக்க
மஞ்சள் குங்குமம் மிளிர்ந்திடக் காக்க
மாலையும் காலையும் மலைமகள் காக்க
மித்திரரையும் புத்திரரையும் சர்வேஸ்வரி காக்க
மீனாட்சி விசாலாட்சி விருப்பமுடன் காக்க
முத்தமிழை முன்னின்று காக்க
மூவுலகையும் மூக்காம்பிகை காக்க
மெய்ஞானம் தன்னை மேம்படக்காக்க
மேன்மையுடன் சைவநீதி காக்க
மைதிலி மாதவி மனம் நிறைந்து காக்க
மோகன சுந்தரி அட்டலட்சுமி தாயே
மௌனம் அகற்றி மக்களைக்காக்க

வருக வருக வல்லமை தந்து வருக
வாதமும் பேதமும் மறைந்து போக
விரைந்தே வருக விடியலைத்தருக
வீணரை வீழ்த்தி மக்களைக்காக்க
வெற்றித்திருமகள் கொற்றவை காக்க
வேலும் சூலமும் கொண்டு வேதவல்லி காக்க
வையகம் சீர் பெற வைதேகி காக்க
காக்க காக்க நாகதாயே நம்மைகாக்க

சக்திக் கவசத்தை சுத்தியுடன்
பக்தி கொண்டெழுதினேன்
சஞ்சலம் போக்கிட சங்கரி அருள்தா
தஞ்சம் தஞ்சம் தஞ்சம் தாயே.

**தெல்லியூர் சர்வாம்பிகை இராசநாயகம்**

2) அன்னையைக் கண்டு கொண்டேன்
அண்டமெல்லாம் நிறைந்து நிற்கும்
ஆண்டவனைக் கண்டு கொண்டேன்
இருள் விலக அருள்தரும் இதயத்தில்
ஈஸ்வரியில் ஒளியைக் கண்டு கொண்டேன்
அன்னையைக் கண்டு கொண்டேன்

உலகமாதா ஆதிபராசக்தியை இறை
ஊழியம் செய்யும் உயர்ந்தோரிடத்தில் கண்டு கொண்டேன்
எல்லையற்ற சோதனைகள் மத்தியிலும்
ஏற்றம் தரும் நாமத்தில் கண்டு கொண்டேன்
ஐம்புலனையும் அடக்கியபோது அன்னை
நாகதாயைக் கண்டு கொண்டேன்
ஒப்பிலா மாமணி எங்கள் சக்தி
ஓங்காரியைக் கண்டு கொண்டேன்
கலைமகளை அலைமகளை திருமகளைக்
கண்டுகொண்டேன்
அன்னையைக்கண்டு கொண்டேன்

கணேசனுடன் கந்தனுடன் கருணைமிகு
காயத்திரி காமாட்சியைக் கண்டுகொண்டேன்
கிரிவலம் வரும் போதும் கிருஷ்ணனின்
கீதை கேட்கும் போதும் சங்கரியைக் கண்டுகொண்டேன்
குங்கும நாயகி மகாலட்சுமியை-என்
குருவாக கண்டு கொண்டேன்
கூழ் குடித்த கோமகளை
கூடித் தொழும்போது கண்டுகொண்டேன்
அன்னையை கண்டுகொண்டேன்

கெஞ்சி அழும் போதும் தொழும் போதும் அன்னை
கேதாரநாயகியைக் கண்டு கொண்டேன்
கைலா சநாயகியின் கனிவான பார்வையில்
கொற்றவையின் வீரத்தில் கண்டு கொண்டேன்
கோகிலம் கூவும் போதும் கோதை குரல் கண்டுகொண்டேன்

சதம் சதமாக எண்ணும் போது சக்தியை கண்டு
கொண்டேன்
சாதம் பிசையும் போது அன்னபூரணியைக் கண்டு
கொண்டேன்.

சிந்தை நொந்து வருந்திய போது
சிம்மவாகினி துர்க்கைத்தாயை கண்டு கொண்டேன்

சீர்மிகு நாகபூசணியை சிவமாக கண்டு கொண்டேன்
சீமைக்கு சென்ற போதும் சிவகாமியைக் கண்டு
கொண்டேன

அன்னையைக்கண்டுகொண்டேன்

சேவையாற்றும் தொடரிலும் கண்டு கொண்டேன்
சைவநீதியிலும் சக்தியை கண்டு கொண்டேன்
சொல்லாக பொருளாக சோதியைக் கண்டு கொண்டேன்
சோதிமயமான எம் குலமகள் ஈஸ்வரி
சௌந்தரியை பரம்பொருளாக கண்டுகொண்டேன்
நாகம் படம் எடுத்த போது நயினைத்தாயைக்
கண்டுகொண்டேன்
பாகமாய் பகிர்ந்துநின்ற பார்வதி சிவனைக் கண்டு
கொண்டேன்
தாகத்தில் தவித்தபோது தண்ணீரில் கண்டு கொண்டேன்
வேண்டும் வரம் கிடைத்தபோது வேதவல்லியைக்கண்டு
கொண்டேன்
பாதம் பணிந்து நிற்கையில் பராபரையே கண்டு
கொண்டேன்
கலங்கி தவித்தபோது கருமாரியைக் கண்டு கொண்டேன்
சத்தியம் ஜெயித்தபோது சக்தி நீதான் என்று
பக்தியுடன் கண்டு கொண்டேன்
ஓம் ஓம் சக்தி ஓம்

சக்திமயம்
அரயே சக்தி அவன் அசைவும் சக்தி
அசையும் காற்றும் சக்தி அனலும் சக்தி
தாகம் தீர்க்கும் புனலும் சக்தி அனுவும் சக்தி
அண்டமும் சக்தி உயிரும் சக்தி- உயிர்
உறையும் உடலும் சக்தி மழையும் சக்தி
மண்ணும் சக்தி விண்ணும்சக்தி - மந்திரத்திலும் சக்தி
இயந்திரத்திலும் சக்தி இயற்கையே சக்தி
இறைவனே சக்தி
ஓம் ஓம் சக்தி ஓம்

**தெல்லியூர்திருமதி சர்வாம்பிகை இராசநாயகம்**

3) சரணடைந்தேன் தாயின் திருவடியில்
அன்று அழுத சம்பந்தனுக்கு -ஞானப்பாலைக்
அன்புடன் கொடுத்தவளே- உமையவளே
இன்று எனக்கு அருள் தர வாரும் அம்மா
உன் தாள் பணிந்து போற்றுகிறேன்- அன்னையே

-அன்று-
மாயவளே மகேஸ்வரன் பாதி நீதானே - என்
காயம் மாறிட வழி சொல்லம்மா -எப்படி
இயம்பிடுவேன் உன் அருளை - ஈஸ்வரியே
மயக்கத்தை போக்கிவிடு மகாமாயே அன்று
மாயவளே திருநீறு தரும்போதே -நீ
அருளாசியும் தந்திடுவாய்-நாகதாயே
பருப்புடனே அமுதளிக்கும் அன்னபூரணி
காருண்யதாயே சரணம் சரணம் அன்று

சரணடைந்தேன் உன்பாதம் சங்கரியே
வரம் அருள வந்திடு அம்மா தாயே
கரம் குவித்து வணங்கி நின்றேன் அம்மன் தாயே
சிரம் தாழ்த்தி பணிகின்றேன் மீனாட்சிதாயே அன்று...

தாயின் தரிசனம் காண ஓடோடிவந்தேன்
சேயின் குறைகேட்டு ஆசிகூறி அணைத்திடம்மா
வாய் திறந்து பண்பாட நல்ல தருணமிது
நோய் போய் விடும் உன் நீறாலே அருளாலே அன்று.....
அருள் வல்லமை தந்திடுவாய் வாரகி தாயே
கல்வியும் ஞானமும் களிப்புடன் பெற்றிடவே - உன்
சொல் கேட்க ஓடோடி வந்தேன் நின் வாசல் தேடி
அல்லல் தீர்த்திட வந்துவிடு கருமாரி அன்று.....

கருமாரி கருணை விழி மலர்ந்திடம்மா
வருவாய் வருவாய் என் குறை தீர்க்க
திருவாய் மலர்ந்திடு அருள்வாக்கு
தருவாய் தருவாய் மனச்சாந்தி அன்று...

சாந்தி சாந்தி சாந்தி ஓம் சாந்தி - பாற்குடம்
ஏந்தி வந்தேன் என் தோஷம் போக்க
நொந்து உள்ளம் அழுகிறோம் பாவம் போக்க
வந்து எனக்கு அருள் தருவாய் ஈஸ்வரியே அன்று.....

சரணம் சரணம் சங்கரியே சரணம்
சரணம் சரணம் சங்கரன் பாதி நீ சரணம்

**மூளாய்யூர் அருகாக்ஷினி இ.கேசவநாதன் மலேசியா**

4) ஆடி வாற அம்மா ஆடிவாறா
பெருமை மிகு பெனாண்டோ வீதியிலே
கருணையுடன் கோயில் கொண்டே - என்றும்
அருளாட்சி புரிந்திடும் நாகதாயே- ஞானத்தாயே
திருமகளே வருக வருக வருக
வருக வருக சிவசக்தி வடிவுடன் வருக
தருக நின் அருளாசி அள்ளித் தருக - எமக்கு
குருவடிவான அன்னையே அபிராமியே
இருளகற்றிட ஊர் உலா வருக வருக
ஊர் காக்க உலா வந்த எம் அன்னையே
சீர்மிகு நாகபூசனி தாயே மலைமகளே மாயவளே
பார்வதி தாயே வருக வருக - என்றும்
கீர்த்தியும் சாந்தியும் நகருக்கு தருக தருக
வெண்டாமரையில் அமர்ந்த கலைமகளே
வேண்டும் அடியார் துயர் தீர்த்திட வருக
தாண்டவமாடியே வருக குழந்தைகளை
ஆண்டருள வருக வருக வருக
நாற்திசையும் அருள் பரப்பி வருக
பாற்கடல் உறை பரந்தாமன் சோதரியே வருக
தோற்றம் பலவானாலும் சக்தி ஒன்றுதானம்மா
போற்றி போற்றி பொன்மகளே போற்றி
ஐங்கரனுடன் ஆறுமுகனையும் தந்தவளே
சங்கரனுடன் இணைந்து சங்கடம் தீர்ப்பவளே
சங்கு சக்கர நாயகியே சங்கரியே வருக வருக
சர்வவல்லமையே சக்தியே வருக வருக
உண்டி கொடுத்து உயிர் காப்பவளே
உண்டியலாலே உபாய செய்தவனை உலகுக்கு
உண்மை காட்டிய உமையவளே எம்
கண்மணிலே கலியுக நாயகியே வருக வருக
கார் இருளகற்றி களிப்புடன் வருக வருக
ஆர்வமுடம் தேர் வடம் பிடிக்க அருள்தந்து வருக
ஏர் போற்றிட வருக வருக பார் போற்றும்
பார்போற்றும் பகவதியே வருக வருக வருக

**தெல்லியூர் திருமதி சர்வாம்பிகை, இராசநாயகம்**

5) சக்தி தாயே சரணம் சரணம்

சித்தமது வேண்டுவதை சீக்கிரமாக தந்துவிடு
சித்தி விநாயகரே சிவசக்தி பாலகரே
சங்கடங்களை நீக்கிவிடு சஞ்சலம் போக்கிவிடு
சங்கரனார் முதல்வனே சரணம் சரணம்

உன் கோயில் தேடி ஓடிவந்தேன்
என் மனக் கோயிலுக்கு நீ ஏன் வரவில்லை
நான் செய்த பாவம் தீரவில்லையா
அன்னையே குறையவில்லையா உன்கோபம்
உன்கோயில்

அல்லாடும் மனதை நீ அறியாயோ
கல்லான மனம் கரையாதோ
பொல்லா வினைகள் போகாதோ
சொல்வாய் தாயே எனக்கொரு பதில்
உன்கோயில்

பக்தர் குறை போக்கி பசிதீர்க்கும் தாயே
தக்க தருணமிது தந்திடம்மா உன் அருளை
போக்கிடுவாய் என் துயரை - இப்புவியில
எக்காலமும் எனக்கினி துயரே இல்லை உன்கோயில்

கலங்கி தவிக்கும் அடியேனுக்கு - நீதான்
கலங்கரை விளக்கு கமலை உன்
சலங்கை ஓசையில் என்னைப்பற்றிய வினைகள்
விலகி ஓடிவிடும் தாயே
உன்கோயில் தேடி

என்று நீ வருவாய் என்குறைதீர்க்க
கன்றின் குரல் கேட்கலையே - அன்றும்
இன்றும் உன் திருவடி போற்றுகிறேன்
என்னை ஆட்கொள்ள வந்துவிடு தாயே
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**அருகாஷினி இ.கேசவநாதன்.**

ஓம் சக்தி

**நாகதாயே தேரில் ஏறி வா வா**

அம்மா, ஆதிசக்தியே எமை அரவணைக்க வா வா
ஆதிசக்தியே, இன்ப ஊற்றே அற்புதமாய் வா வா
இன்ப ஊற்றே, ஈடில்லா அன்புருவே விரைந்து இங்கு வா வா
ஈடில்லா அன்புருவே, உற்ற துணையே நாம் வாழ வா வா
உற்றதுணையே, ஊர்மகிழ என் உளம் குளிர ஒடி நீ வா வா
ஊர் மகிழ, எல்லோருக்கும் அருள் புரிய பவனியாய் வா வா
எல்லோருக்கும், ஏற்றங்கள் தந்திடவே எழிலுடன் வா வா
ஏற்றமிகு, ஐந்து தலை நாகமாய் வா வா
ஐந்துதலை, ஒப்பில்லா அழகு நிலை வா வா
ஒப்பில்லா, ஓம் சக்தி மெய்பொருளே வா வா
ஓம் சக்தி, அ:.து எம்மை வாழ்விக்க வா வா
அ:.து ஒன்றே, காணவேண்டும் தேரில் ஏறி வா வா
ஓம் சக்தி, ஓம் சக்தி தேரில் ஏறி வா வா
அ:.து ஒன்றே காண வேண்டும் தேரில் ஏறி வா வா

**நாகதாயின் நிழலில்**
***சி. துரையப்பா.***



## ஐயப்பன்

ஐயப்பன் சதானந்தன், பூதநாதன், சாஸ்தா என்னும் திருநாமங்கள் கொண்ட கலியுக வரதன் சபரிமலையில் கோயில் கொண்டு அருள்பாலிக்கிறார். மகா விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்ததைக் கைலாசபதியாகிய பரமேஸ்வரன் காண விரும்பினார் அப்படியே விஷ்ணுவும் சிவபெருமானுக்கு காட்சியளிக்க அச்சந்திப்பினால் ஹரிஹர புத்திரன் என்ற ஐயப்பன் தேஜோ மயமாக மகாவீர்ய வரநாக ஞான சூர்யனாக அவதரித்தாள் சாஸ்தா என்றால் திருத்திற் பணி கொள்ளும் சிறந்த ஆசிரியர் என்று கூறும்.

## வரலாறு

ஐயப்பன் சரித்திரம் தற்காலத்தில் கேரளத்திலும் தமிழ் நாட்டிலும் பிரசித்து அடைந்து இருக்கிறது. ஐயப்பன் பந்தள மன்னருக்குத் தெய்வீக குழந்தையாக கிட்டி பூலோகத்தில் பிறந்து பிரமச்சாரியாகவும் யோகியாகவும் திகழ்ந்தார் அற்புத லீலைகளை புரிந்து பக்தர்களை காத்து சபரிமலையில் ஸ்வயம் வ்வியத்தமாக் காட்சியளிக்கிறார் பூலோகத்தில் அவதரித்த ஐயப்பன் குழந்தையாக குளத்துபுழையிலும் பாலனாக ஆரியங்காவிலும் அரசனாக அச்சம் கோவிலிலும் கிராதபுருஷ மூர்த்தியாக எறிமேலியிலும் தர்மசாஸ்தாவாக சபரிமலையிலும் வீற்றிருந்து மக்கள் துயர் தீர்க்கும் பரதட்வமாக விளங்குகின்றாள் மாளிகைபுறத்தின் பிரர்த்தனைக்கு செவிசாய்த்து காந்த மலையில் ஜோதிஸ்வரூபமாக தரிசனம் அளித்து மகா சாஸ்தா என்றும் போற்றப்படுகிறார்

**தத்துவம்**

ஐயப்பன் பூலோகத்தில் மணிகண்டனாக அவதரித்து புலிப்பால் கொண்டு வரும் வழியில் சபரி என்ற வித்யாதர ஸ்திரி தவம் செய்து அவரை உபசரித்து பெரும் மித அடைந்தார் ஐயப்பனும் அவளுக்குத் தேவலோகம் செல்வதற்கு வரமளித்து சாபம் தவிர்த்து அவள் கேட்ட பிரகாரம் சபரி "செய்து முத்திக்பெற்றமலை" என்ற பொருட்பட சபரி மலை என்று விளங்கும் வரமளித்தார்.

சபரி 18 நமஸ்காரங்கள் செய்ததால் 18 சித்திகளையும் 18 புராணங்களையும் 18 படிகளாக அமைத்து கோயில் கொள்வதாகவும் ஒவ்வொரு வருடமும் தன்னை தரிசித்த சித்தபுருஷர்களாகவும் முமுகூக்களாவும் ஆவார்கள் என்று வாக்களித்து சபரிமலையில் தவம் மிருக்கிறார் மணிகண்டன்.

**வழிபாட்டு முறை**

ஐயப்பனை பக்த கோடிகள் சரணம் ஐயப்பா என்று நமஸ்காரம் செய்வார்கள் பயபக்தி, ஆசாரம், பிரம்ம சாயத்துடன் ஹரிஹரனை வணங்கவேண்டும். சபரிமலையாத்திரை செய்யவேண்டியவர்கள் விரத அனுஷ்டான முறைகளுடன் நோன்பிருந்து ஐப்பனை அணுகவேண்டும்

## ஐயப்பன்

ஓம் ஓம் ஐயப்பா - ஓம் குருநாதா ஐயப்பா
கருணாஸாகர ஐயப்பா - அம்பிகை பாலா ஐயப்பா
ஆபத்பாந்தவா ஐயப்பா - ஆதி பராபரா ஐயப்பா
இருமுடிப்பிரியா ஐயப்பா - இரக்கம் மிகுந்தவா ஐயப்பா
ஈசன் மகனே ஐயப்பா - ஈஸ்வரி பாலா ஐயப்பா
உமையாள் பாலா ஐயப்பா - உறுதுணை நீயே ஐயப்பா
ஊக்கம் தருவாய் ஐயப்பா - ஊழ்வினை அறுப்பாய் ஐயப்பா
எங்கும் நிறைந்தவா ஐயப்பா - எங்கள் குருநாதா ஐயப்பா
பாம்பா தீரா ஐயப்பா - பந்தள வேந்தா ஐயப்பா
அம்புலி வாகன் ஐயப்பா - மனதில் இருப்பவா ஐயப்பா
சபரி கிரீசா ஐயப்பா - சாந்த சொரூபா ஐயப்பா

ஆடி, ஆடி வருபவர்கள் எத்தனை கோடி
ஆனந்தமாய் உன்புகழை நித்தமும் நாடி
ஓடி, ஓடி வருபவர்கள் எத்தனை கோடி
ஐயப்பனே உன் அடியை கண்டிட நாடி
இளையவனே இனியவனே உன் திருநாமம்
உரைப்பவற்கே நீங்குதையா பல பல பாவம்
மலைமுடியில் காணுகின்ற அருட்சுடர் தீபம்
பார்ப்பவர்கள் உன் கருணை பெற்றவர் ஆவர்
சிறுவர் செய்த பிழைத்தனையே பொறுத்திடுவாயே
சிரித்து வாழும் நிலைதனையே அளித்திடுவாயே
ஒரு பொழுதும் உனைமறவா வரம் அருள்வாயே
உனது அடிசேரும் வரை துணைவருவாயே

1. சத்திய ஜோதி தெரியுதையா
நித்திய வாழ்வு புரியுதையா
சாஸ்தா ஆலயம் தெரியுதையா
சங்கடமெல்லாம் மறையுதையா

2. தேடும் அடியவர் தியானத்திலே
தேங்கும் அருளே தேன் அமுதே
பாடும் எனக்கொரு வரமேதா
சரணம் சரணம் ஆண்டவனே

3. கார்த்திகை மாதம் மாலையிட்டேன்
காலையும் மாலையும் பூசையிட்டேன்
மகர மாதத்தில் மலையடைந்தேன்
மகர சோதியில் எனை மறந்தேன்

4. எண்ணம் வளர இடர் அகல
இன்பம் அறிந்து நலம் பெருக
என்றும் வாழ்வில் வளம் பெருக
யாவும் தருவாய் ஆண்டவனே

5. மாமலை ஏறிப்போகையிலே
மனதில் இன்பம் தோன்றுதையா
சபரிக் காட்டில் நடக்கையிலே
சாந்தி நிறைந்து தோன்றுதையா

6. ஓரடி ஈரடி நடந்து வந்தேன்
ஒவ்வொரு மலையாய் கடந்து வந்தேன்
இருமுடி தலையில் சுமந்து வந்தேன்
திருவடி துணை என்று நாடி வந்தேன்

7. செந்தூர உன் வடிவழகை
செந்தமிழில் நான் பாட வந்தேன்
உந்தன் முகம் நான் காண வந்தேன்
சபரி மலை மீது ஏறிவந்தேன்

8. பதினெட்டாம் படியை தாண்டயிலே
பக்தியும் எல்லையை தாண்டுதையா
பந்தளக் குழந்தையை பார்க்கையிலே
பக்தியும் எல்லையை தாண்டுதையா

9. வீரம் தவளும் திருமுகமும்
வீதியில் அருளும் பேரழகும்
சேரும் திருவே அருள் சாஸ்தா
சரணம் சரணம் குரு நாதா

10. ஐயனை மனதில் நினைக்கையிலே
ஐயம் எல்லாம் மறையுதையா
மகர ஜோதியை காண்கையிலே
மரண பயமும் நீங்குதையா (சத்திய)



சுவாமி சரணம் ஐயன் சரணம் ஐயப்பா
சரணம் சரணம் பொன்ஐயப்பா
அச்சங்கோவில் வாசா சரணம் பொன்ஐயப்பா

1. அல்லல் அகற்றுவாய் சரணம் பொன்ஐயப்பா
(சுவாமி சரணம்)

2. ஆரியங்காவாய் சரணம் பொன்ஐயப்பா
ஆறுதல் அளிப்பாய் சரணம் பொன் ஐயப்பா
(சுவாமி சரணம்)

3. இருமுடி பிரியனே சரணம் பொன்ஐயப்பா
இடர்கள் தவிர்ப்பாய் சரணம் பொன் ஐயப்பா
(சுவாமி சரணம்)

4. குளத்தூர் பாலா சரணம் பொன் ஐயப்பா
குறைகள் தீர்ப்பாய் சரணம் பொன் ஐயப்பா
(சுவாமி சரணம்)

1. ஐயப்பன் கோவிலில் நெய்விளக்கு
அடியவர் உள்ளத்தில் மெய் விளக்கு
வையக தர்மத்தில் சுடர் விளக்கு
வணங்கிடும் மாந்தர்க்கு அருள் விளக்கு
(ஐயப்பன்)

2. கோடி கதிரவன் தேடி வரும் கோல
குன்றத்திலே அவன் வீற்றிருப்பான்
பாடிதுதிக்கும் வேளையிலே அவன்
பக்கத்தில் வந்து சேர்ந்திசைப்பான்

(ஐயப்பன்)

3. தன்னை அறியாத மானிடரும் என்றும்
தன்னை உணர்ந்தாரும் ஞானியரும்
மின்னும் க்ணத்திலே மெய்மறப்பார் வண்ண
மகர விளக்கிலே களித்திருப்பார்

(ஐயப்பன்)

4. தனியாய் நின்றது பழனிமலை
கனிவாய் நின்றது தணிகை மலை
சிவனார் நின்றது கையிலை மலை
தீபத்தில் நின்ற மலை சபரி மலை

(ஐயப்பன்)

ஹரிவராசனம் ஸ்வாமி விஸ்வ மோகனம்
ஹரித தீஸ்வரா சுவாமி ஆராத்ய பாதுகம்
அரிவிமர்த்தனம் ஸ்வாமி நித்ய நர்த்தனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ர்யே
சரண கீரத்த்னம் ஸ்வாமி ஸக்த மானஸம்
ப்ரண லோலுபம் ஸ்வாமி நர்த்னாசலம்

அருண பாஸுரம் ஸ்வாமி பூதநாயகம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே
ப்ரணயசத்யகா ஸ்வாமி ப்ராண நாயகம்
ப்ரணத கல்பகம் ஸ்வாமி சுப்ர பாஞ்சிதம்
ப்ரணவ மந்திரம் ஸ்வாமி கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே
கலமிருதுஸ்மிதம் ஸ்வாமி சுந்தானனம்
கலபகோமளம் ஸ்வாமி காத்ரமோஹனம்
கலபகேசரி ஸ்வாமி வாஜிவாஹனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே
ச்ரித் ஜனப்ரியம் ஸ்வாமி சிந்திப்ரதம்
சுருதிவிபூஷணம் ஸ்வாமி ஸாதுஜீவனம்
சுருதிமனோஹரம் ஸ்வாமி கீதலாலஸம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே

மலைத்திருநாட்டில் பிறந்தவனே - ஒரு
மானிட உருவில் வளர்ந்தவனே
ஒலி ஒளியாவிலும் நிறைந்தவனே - அந்த
அரகர சிவனின் திருமகனே - மலை

தீமைகள் களைந்திட துணிந்தவனே - கொடும்
சீறிடும் புலிமேல் அமர்ந்தவனே
சாமி சரணம் ஐயப்பனே - இங்கு
சகலமும் நீயே என்னப்பனே - (மலை)

நல்லவர் மகிழ்ந்திட அவதரித்தாய் உனை
நம்பிய பேர்களுக்கருள் கொடுப்பாய்
தொல்லைகள் நீங்கிட துணை இருப்பாய் - கை
தொழுபவர் நெஞ்சிலே குடியிருப்பாய் - (மலை)

வா வா என்றால் வந்திடுவாய் - வரம்
தா தா என்றால் தந்திடுவாய்
ஆகா உன்புகழ் பாடி விட்டால் - இங்கு
போகா வினையும் போகுதையா - (மலை)

| | | |
|---|---|---|
| பள்ளிக்கட்டு | - | சபரிமலைக்கு |
| கல்லும் முல்லும் | - | காலுக்கு மெத்தை |
| சுவாமியே | - | ஐயப்போ |
| பகவானே | - | பகவதியே |
| தேவன் பாதம் | - | தேவி பாதம் |
| ஏக பலம் தா | - | பாத பலம் தா |
| சுவாமி சரணம் | - | ஐயப்ப சரணம் |
| பகவான் சரணம் | - | பகவதி சரணம் |
| தேவன் சரணம் | - | தேவி சரணம் |
| நெய் அபிஷேகம் | - | சுவாமிக்கே |
| கற்பூர தீபம் | - | சுவாமிக்கே |
| சரணம் சரணம் | | |
| ஐயப்பா | - | சுவாமி சரணம் ஐயப்பா |
| பந்தள வேந்தா | - | ஐயப்பா |
| ஹரிஹர சுதனே | - | ஐயப்பா |

மணிகண்ட சுவாமி - ஐயப்பா
இருமுடி ப்ரியனே - ஐயப்பா
குளத்தூர் பாலா - ஐயப்பா

ஹரிஹர சுதன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்ப
சபரி மலை நாதன் சங்கடம் தீர்ப்பான்
அபயம் அடைந்தால் ஆறுதல் அளிப்பான்
கையினால் தொழுதிட காட்சியளிப்பான்
கற்பூர ஜோதியாய் நின்றருள் புரிவான்

1. பந்தள செல்வன் கோயில் அப்பா
அங்கு பாயும் புலிகள் காவலப்பா
பக்தி உன்னிடம் மேலப்பா உன்னை
பக்தர்கள் பார்த்திட ஆவலப்பா - பந்தள

2. சபரி மலை என்று ஒரு மலை இருக்கதாம் - அங்கு
சகலரையும் காக்கும் தெய்வம் குடியிருக்குதாம்
அபயம் என்று சொல்பவர்களுக்கு அருள்கொடுக்குதாம் -
இந்த அவனியெல்லாம் அவன் புகழே நிறைந்திருக்குதாம்

3. பம்பை நதியில் மூழ்கிவந்தால் பாவம் விலகுதாம் நம்மை
பார்ப்பவர்கள் வியக்க மேனி அழகு பெருகுதாம்
நம்மை நாமே மறந்து விடும் நிலமை தெரியுதாம் - துன்பம்
நம்மை கண்டு அஞ்சி அஞ்சி ஓடி மறையுதாம்

நாங்கள் தள்ளாடி தள்ளாடி நடை நடந்து
நாங்கள் சபரியை நோக்கி வந்தோம் அப்பா
சுவாமியே ஐயப்பபோ பகவானே பகவதியே
தேவனே தேவியே சுவாமியே ஐயப்போ !
நாங்கள் பம்பையில் இறங்கி குளித்தாடி
நாங்கள் பந்தள குழந்தையை கண்டோம்மப்பா - (சுவாமியே)

நாங்கள் வன்புலி மேலமரும் மணிகண்டனை
நாங்கள் வரம் கேட்டு மகிழந்திட சென்றோமப்பா (சுவாமியே)
நாங்கள் இருமுடிதூக்கிக்கிட்டு தேங்காய்
உடைத்துக்கிட்டு பதனெட்டுபடி ஏறிவந்தோமப்பா - (சுவாமியே)

ஸ்வாமி நிந்தக்க தோம் ஐயப்பதிந்தக்க தோம்
நாங்கள் தள்ளாடி......
சுவாமி சரணம்
(மெட்டு கண்ணிலே இருப்பதென்ன)

பலாபிஷேகம் செய்தோம் சரணம் பொன் ஐயப்பா
பாலன் எனை காத்திடுவாய் சரணம் பொன்ஐயப்பா
பண்புடன் விரதம் கொண்டோம் சரணம் பொன் ஐயப்பா
பாங்குடனே பூஜை செய்வோம் சரணம் பொன் ஐயப்பா

மஞ்ச மாதா நேசனே சரணம் பொன் ஐயப்பா

மஞ்சளால் அபிஷேகம் சரணம் பொன் ஐயப்பா
தஞ்சமென நம்பி வந்தோம் சரணம் பொன் ஐயப்பா
அஞ்சேன் என அருளிடுவாய் சரணம் பொன் ஐயப்பா

3. தை மகர ஜோதியே சரணம் பொன் ஐயப்பா
தயிரபிஷேகம் செய்தோம் சரணம் பொன் ஐயப்பா
தாயெனக் காத்திடுவாய் சரணம் பொன் ஐயப்பா
தயைபுரிவாய் அருள் புரிவாய் சரணம் பொன் ஐயப்பா

4. சந்தணத்தில் குளிக்க வைத்தோம் சரணம் பொன்ஐயப்பா
சந்ததியை வாழச் செய்வாய் சரணம் பொன்ஐயப்பா
சந்ததமுன் தாள் பணிந்தோம் சரணம் பொன் ஐயப்பா
சிந்தையில் உன் நினைவொன்றே சரணம் பொன் ஐயப்பா

5. குருவருளால் உனைத் தெரிந்தோம் சரணம் பொன் ஐயப்பா
உறுதுனை நீயே ஐயா சரணம் பொன் ஐயப்பா
வெண்ணீரபிஷேகம் சரணம் பொன் ஐயப்பா
என்னுயிரே இன்னுயிரே சரணம் பொன் ஐயப்பா

6. பஞ்சபூதல நாயகனே சரணம் பொன் ஐயப்பா
பஞ்சாமிர்த அபிஷேகம் சரணம் பொன் ஐயப்பா
நெஞ்சகத்தில் நிறைந்தவனே சரணம் பொன் ஐயப்பா
கொஞ்சிக் கெஞ்சி பாடிடுவோம் சரணம் பொன் ஐயப்பா

7. தேனபிஷேகம் செய்தோம் சரணம் பொன் ஐயப்பா
தேனினிய நாமம் கொண்டாய் சரணம் பொன் ஐயப்பா
தாங்கினோம் இருமுடியை சிரந்தனில் ஐயப்பா
ஏங்கினோம் உனைக் காண சரணம் பொன் ஐயப்பா

8. அபிஷேகம் ஏற்றருள்வாய் சரணம் பொன் ஐயப்பா
அழகனே ராஜனே சரணம் பொன் ஐயப்பா
துளசி மணி மார்பனே சரணம் பொன் ஐயப்பா
துயர்களைக் களைந்திடுவாய் சரணம் பொன் ஐயப்பா

9. புஷ்பாஞ்சலி ஏற்றருள்வாய் சரணம் பொன் ஐயப்பா
பூஜையிலே எழுந்தருள்வாய் சரணம் பொன் ஐயப்பா
ஆயுள் முழுதும் உனைக்காண சரணம் பொன் ஐயப்பா
அன்புடனே அழைத்திடுவாய் சரணம் பொன் ஐயப்பா

# கீதாசாரம்

எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்
அது வீணாவதற்கு
எதை நீ எடுத்து கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
நாளை அது மற்றொருவருடையாகிறது
மற்றொருநாள் அது
வேறொருவருடையாகிறது.



'இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்'

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**